விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 18 வெள்ளிக்கிழமை (03.05.2002) தொலைபேசி 3378 ஒலி 135

★ புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைத்தல்
★ புலிகளின் தடையை நீக்குதல் ★ வட- கிழக்கில் படையினரை வாபஸ் பெறல்

# மக்களின் விருப்பத்தை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்



## மகாநாயக்க தேரர்களுக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு, பெரும்பான்மை மக்களின் ஆதரவு உண்டா? இல்லையா? என்பதை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் குறித்து மகாநாயக்க தேரர்கள், மகாசங்க சபையினர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜருக்கு பதிலளிக்கும் முகமாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டைப் பாதுகாப்பதற்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ள அரசாங்கத் தலைவி என்ற வகையிலும், தேசிய பாதுகாப்பிற்கு பொறுப்புக் கூற வேண்டியவர் என்ற வகையிலும், நாட்டினதும், நாட்டு மக்களினதும் இறைமையைப் பாதுகாக்க வேண்டியவர் என்ற வகையிலும் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றேன்.

இலங்கை அரசும்- தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து

(10ம் பக்கம் பார்க்க)

## படைத்தரப்பின் செய்திக்குப் புலிகள் மறுப்பு

# வாகரையில் வெடித்துச் சிதறியது விடுதலைப் புலிகளின் படகு அல்ல

### மட்டு- அம்பாறை அரசியல் பிரிவு அறிக்கை

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு வாகரைக் கடற்படையினரின் வழிமறிப்புக்குள்ளாகி வெடித்துச் சிதறிய படகு தமிழீழ விடுதலைப் புலிகளின் படகு அல்ல என்றும் அது மீனவர்களுடைய படகு என்றும் விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை மாவட்டச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.**

மட்டக்களப்பு வாகரை கடற்பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை தமிழீழ விடுதலைப் புலிக

பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் துறை

வித்துள்ளதுடன், இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் அவ்வறிக்கையில் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா படைத்தளபதியுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்கள் வவுனியா படைத்தளபதி மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரைத் தனித்தனியே சந்தித்து வவுனியாவில் தற்போது உள்ள

பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளின் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலவன் மற்றும் எழிலன் ஆகியோரும் இராணுவத்

(10ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு வாகரை கடற்பிர தேசத்தில் நேற்று முன் தினம் மாலை தமிழீழ விடுதலைப் புலிக ளின் படகுகள் என்ற சந்தேகத்தின் பேரில் ஸ்ரீலங்காக் கடற்படையினர் வழிமறித்தபோது அப்படகில் ஒன்று வெடித்துச் சிதறியது என இராணு வத் தரப்பில் முன்னர் தெரிவிக்கப்

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் வாக ரைக் கடல் பிரதேசத்தில் வெடித் துச் சிதறிய படகு விடுதலைப் புலிக ளது படகு அல்ல என்றும் அது மீனவர்களின் படகு என்றும் தெரி

பில தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் அவ்வறிக்கையில் முற்றாக நிராகரிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக நோர்வேயின் யுத்த நிறுத்தக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் பியூறு ஹெவ்டே நேற்று மட்டக்களப்பில்

(10ம் பக்கம் பார்க்க)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகி யோரைத் தனித்தனியே சந்தித்து வவுனியாவில் தற்போது உள்ள சில நடைமுறைச் சிக்கல்கள் தொடர்

பொறுப்பாளர் மேலவன் மற்றும் எழிலன் ஆகியோரும் இராணுவத்

(10ம் பக்கம் பார்க்க)

# பிரதமரின் சமாதான முயற்சிக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந் துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் அவரது அரசா ங்கத்திற்கும் பூரண ஒத்துழைப்பை வழங் குவதுதான் அனைவரினதும் பொறுப் பாகும். இவ்வாறு ராமன்னிய நிக்கா யாவின் மகாநாயக்கர் சங்கைக் குரிய தெபல்தெனியே மேடெலங் கார தேரர் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

சாசனவர்த்தன பிரிவென விகா ரையில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச் சர் கருஜெயசூரியவும் தேரரைச் சந்தித்து உரையாடினர்.

இதன்போதே தேரர் மேற்கண் டவாறு வேண்டுகோள்விடுத்தார்.

நாட்டில் இடம் பெறும் பிரச்சினையை

(10ம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரம் சிறைக் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடு தலை செய்யக்கோரி இன்று முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

12 கைதிகளும் நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப் பட்டபோது இவர்களை எதிர்வரும் 16ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவருடன் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு

(கொழும்பு)

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இலங்கைக்கான நோர்வேத் தூது வர் ஜோன் வெஸ்பேர்குடன் தற்போ தைய சமாதான முயற்சிகள் தொடர் பாக கலந்துரையாடியுள்ளார்.

எதிர்கால சமாதான திட்டங்கள் சமாதான முயற்சிகளின் போக்குகள் மற்றும் தாய்லாந்தில் இடம்பெற வுள்ள பேச்சு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடியதாகத் தெரி விக்கப்டுகிறது. (இ)

## ஐ.சி.ஆர்.சி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் ஒருமித்த அழைப்புக்கு அமைவாக, ஏ-9 யாழ் கண்டி வீதி ஊடாக பொதுமக்கள் சுமுகமாக போக்குவரத்தை மேற்கொள்ளும் வகை யில், முகமாலை, ஓமந்தை மற்றும் உயிலங்குளம் போக்குவரத்து கடவை களில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை பணிபுரிவதாக சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித் துள்ளது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் நேற்று செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கண்டி வீதி திறக்கப்பட்ட நாள் தொடக்கம் போக்குவரத்துக் கடவைகளில் பின் வரும் நோக்கங்களுக்காகவே நாம் பணியாற்றுகிறோம்.

▶ போக்குவரத்துப் பாதையின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கு தேவையான பயணத் தகவல்களை படையினருக்கும் தமிழீழ

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் கரிகாலனுடன் நேற்றுச் சந்திப்பு

(மட்டக்களப்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந் துணர்வு உடன்படிக்கையை கண் காணிக்கும் நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜென்ரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே நேற்று புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குச் சென்று விடுதலைப் புலிகளின் மட்டு அம்பா றைப் பொறுப்பாளர் கரிகாலன், துணைப் பொறுப்பாளர் துரை ஆகி யோரைச் சந்தித்துள்ளார்.

பட்டிருப்புப் பாலம் ஊடாக புலி களின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கொக்கட்டிச் சோலைக்குச் சென்று அங்கு விடுதலைப் புலிகளின் அலு வலகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

சுமார் 2 மணித்தியாலங்கள் இடம் பெற்ற இச்சந்திப்பின்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சா திட்ட பின்பு மட்டக்களப்பு மாவட்டத்தி அதனை அமுல்படுத்தும்போது ஏ படுகின்ற நடைமுறைச்சிக்கல்க தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாபெரும் சைவ மாநாடு இன்று நல்லூரில் ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துசமயப் பேரவையின் சைவமாநாடு இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளது.

முதல்நாளான இன்றைய நிகழ்வுகள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இரு அமர்வுகளாகஇடம் பெறவுள்ளன.

நிகழ்வுகள்காலை 9மணிக்கு இந்து சமயப் பேரவைத்தலைவர் அருட்கவி சீ. வினாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளன.

வரவேற்புரையை இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை சுவாமி ஆத்மகணானந்தா, நல்லைஆதீன முதல்வர்,மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள், இந்து மத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்.

வாழ்த்துரைகளை பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் அ. பாலறாவாயன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து இந்து தர்மம் நூல் வெளியீடு இடம் பெறவுள்ளது.

வெளியீட்டுரையை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயரும் 'மேன்மைகொள் சைவ நீதி' என்ற விடயத்தில் சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறை தலைவர் பேராசிரியர் இரா. கோபாலகிருஷ்ணன் உரையாற்றுவார்.

பிற்பகல் நிகழ்வுகள் 2 மணிக்குயாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர்சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளன.

வரவேற்புரையை பேராசிரியர் ச. சத்தியசீலனும் வாழ்த்துரையை மல்லாகம் மாவட்ட நீதிபதி க. சுப்பிரமணியமும் தொடக்கவுரையை சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணனும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து, 'நாவலர் பாரம் பரியமும் இன்றைய யாழ்ப்பாணமும்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேலும்,

ஆலய வழிபாட்டில் சிவாசாரியாரின்பங்குஎன்றதலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும்,

'சைவசமயக் கிரியைகள்' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்திக்குருக்களும்,

'சமகாலத்தில் சைவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவனும்,

'பெரிய புராணம் சுட்டும் சமூகப்பணி' என்ற தலைப்பில் சென்னை இலயோலாக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் அ. பாலறாவாயனும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (உ-2)

# தொழில் வாய்ப்புக்கு புதிய கொள்கை விரைவில் அறிமுகமாகும்

(கொழும்பு)

மக்களின் அறிவாற்றல்களுக்கேற்ப புதிய தொழில்வாய்ப்புக்கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம்அலரிமாளிகையில் தொழில்வேலை வாய்ப்புஅமைச்சர்மகிந்தசமரசிங்காவிடமிருந்துதேசியதொழில் வாய்ப்பு கொள்கையின் நகல் சட்டமூலத்தை பெற்றுக்கொண்ட பின்னர் உரையாற்றும்போதேபிரதமர்இவ்வாறு தெரிவித்துள்ளார்

தொழிலாளர்களிற்கும் முதலாளிகளிற்குமிடையேயுள்ள உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்திகளை துரிதப்படுத்த தமது அரசு உத்தேசித்துள்ளதாகவும்,

முதல்முறையாக அமுல் படுத்தப்படவுள்ள இக்கொள்கையின் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்தொழில் புரியக்கூடியவர்களை உருவாக்குவதுடன் அவர்களிற்கு மொழி தொழில் நுட்ப ரீதியான பயிற்சியினை வழங்குவதுமே இக்கொள்கையின் நோக்கமெனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார் (உ.8)

## வருடாந்தம் இலங்கையில் 2500 குழந்தைகள் இருதய கோளாறுடன் பிறப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் பிறக்கும் குழந்தைகளில் 2ஆயிரத்து 500பேருக்கு இருதயக் கோளாறுகள் இருப்பதாக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவசிரேஷ்ட விரிவுரையாளரும் பேராசிரியருமான சனத் லமா பதுசூரியா தெரிவித்துள்ளார்.

ஆயிரத்துக்கு ஆறுமுதல் எட்டுக்குழந்தைகள் பிறப்பிலேயே இருதயக் கோளாறுகளுடன் பிறக்கின்றன.

இவற்றில் இருதயத்தின் இரு சோணையறைகளிற்குமிடையே இருதயத்துவாரங்களுடன் பிறக்கும் குழந்தைகளே அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஆறுமுதல் இரண்டாவது சுற்றில் ஆட கிளி. உ. கழகம் தகுதி

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட கழகமும், பருத்தித்துறை உதைபந்தாட்ட கழகமும் மோதின.

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட கழகம் பருத்தித்துறை கழகத்தை 3:1 என்ற கோல் கணக்கில் வென்று இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

மேற்படி போட்டித் தொடரில் முதலாவது ஆட்டம் கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பொது மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே. கனகராஜா இப்போட்டிக்கு தலைமை தாங்கினார்.

இப்போட்டிக்குஈ.ஆனல்ட், எஸ். கிளிபேர்ட் அன்ரனிப்பிள்ளை, ஏ. ஜெகநாதன் ஆகியோர் நடுவர்களாகவும், 4 ஆவது நடுவராக கப்டன் டி.ஏ.எம். குணசிங்கமும் கடமையாற்றினார்கள். (எ-110)

## திட்ட அறிக்கைகளை உடன் சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான திட்ட அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு, மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

நிதிஉதவிபெறும் அரச நிறுவனங்களுக்கு இதுதொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடு 3 கோடி ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டறிக்கைகள் 2 முதல் 3 கோடி ரூபாவுக்குட்பட்டதாக அமையவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையிலும் உடனடியாக பயன்தரக்கூடியதுமான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-9)

## வீதி இருளில்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பொருத்தப்பட்டிருந்த மின் விளக்கு கடந்த ஒரு வருடமாக பழுதடைந்துள்ளது.

இதனால் இரவு வேளையில் வைத்தியசாலை வீதி இருளில் மூழ்கியுள்ளது. (உ-23)

## படகு சேவை இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் குமுதினிப் படகு, திருத்த வேலை காரணமாக கடந்த மாதம் 29ஆம் திகதி தொடக்கம் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-2,250)

## காணாமற்போன படையினரின் உறவினர் சங்கத் தலைவர் புலிகளை சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை அடுத்தமாத முதல்வாரமளவில் சந்திக்கவுள்ளதாக காணாமல் போனபடையின் உறவினர்கள் சங்கத்தலைவர் ஏ.ரி. நாணயக்காரதெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் 7 இராணுவத்தினரின் விடுதலை தொடர்பாக கலந்துரையாடவேஅவர் அங்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களாகத் தடுத்து வைத்திருந்த இராணுவத்தினரை மனிதாபிமான அடிப்படையில் தலைவர் பிரபாகரன் விடுதலை செய்திருந்தார்.

இதனையடுத்து, எஞ்சியோரையும் விடுதலை செய்து தருமாறு உறவினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அவர் அங்கு செல்லவுள்ளார். (உ)

## யுத்தத்தால் பெண்களுக்கே மோசமான பாதிப்பு

(கொழும்பு)

பெண்களும் சிறுவர்களும் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுள் 80 வீதமானோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளதாகவும் தேசிய ஆய்வுக்கான சர்வதேச நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கனிலிருந்து புறுண்டிவரை ,சிரியாலியோனிலிருந்து ஸ்ரீலங்காவரை பெண்கள் யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும்,

அவர்கள் பாலியல் வன்முறை,, வல்லுறவு பலவந்தமான விபசாரம் ஆகியவற்றிற்கு இரையாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான பெண்கள் தாய் தந்தையர், கணவன், பிள்ளைகள், சொத்துக்கள், வேலைகள் எல்லாவற்றையும் இழந்தவர்களாக உள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

## கொழும்புத்துறைதுறைமுகம் மீண்டும் இயங்க வேண்டும்

மிகப் பழங்காலத்தில் குடாநாட்டிற்கு வெளியிலான போக்குவரத்தில் கொழும்புத்துறை துறைமுகம் முக்கிய இடம் வகித்தது. இத்துறைமுகத்திற்கும் பூநகரி ஞானிமடம் நாகதேவன்துறைக்கும் இடையில் வத்தை போக்குவரத்து மிகஅண்மைக் காலம் வரை இடம்பெற்று வந்தது. பூநகரி கவுதாரி முனைக்கும் கொழும்புத்துறைக்கும் இடையேவள்ளச் சேவைகள் நடைபெற்றன.

நெல், வைக்கோல், பூவரசம் குழை, தேங்காய், தென்னோலை போன்ற பொருட்கள் தோணிகளில் ஏற்றப்பட்டு வன்னியில் இருந்து இங்கு கொண்டுவரப்பட்டு கொழும்புத்துறையில் இறக்கப்பட்டன. அவை மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டன. ஒரு தோணியில் 150 மூடைநெல்லினை ஒரே தடவையில் ஏற்ற முடியும். இரண்டு ரக்டர்பெட்டிகளில் ஏற்றக் கூடிய வைக்கோலை ஒரே தடவையில்ஒரு வத்தையில் ஏற்றமுடியும். வைக்கோல் புரிகளாக இட்டு வைக்கோலை உருட்டிபழுதை என்ற பெயரில் இங்கு ஏற்றி வந்தனர்.

1796 இல் கட்டப்பட்ட பங்களா ஒன்றுகொழும்புத்துறையில் இருந்தது. இந்தப் பங்களா 2000 ஆண்டு போர் அனர்த்தத்தால் முற்றாக அழிந்து போயுள்ளது. இப்பங்களாபிரயாணிகள் இளைப்பாறும் இடமாக பழங்காலத்தில் இருந்தது. இத்தகைய பங்களா நாகதேவன் துறையில் அமைக்கப்பட்டிருந்தது. இப்பங்களாவும்தற்போதுஅழிந்து போயுள்ளது. நாகதேவன் துறையில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டு, இதுபின்னர் 1994 இல் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

ரங்கூனில்இருந்துதருவிக்கப்பட்ட தேக்கு மரங்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட கொழும்புத்துறை தோணிகள் யாவும் போர் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இத்தகைய வத்தை ஒன்றை கட்டுவதாக இருந்தால் தற்போது குறைந்த பட்சம் 10இலட்சம்ரூபாதேவைப்படும் என வத்தை உரிமையாளர்ஒருவர் தெரிவிக்கின்றார்.

குறைந்த பட்சம் ஒரு சிறிய மீன்பிடித் துறையாக விளங்குவதற்கேனும் இத் துறைமுகம் புனரமைக்கப்பட்டு, அழிந்து போன மீன் சந்தையை புதிதாக அமைப்பதும் கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க கட்டடத்தை மறுசீரமைப்பதும் அவசியமாகும் என இப்பகுதி கடல் தொழிலாளர் தெரிவிக்கின்றனர். (து-225)

## கடந்த இரு மாதங்களில் மத்திய கிழக்கில் பணியாற்றிய 50 இலங்கைப் பெண்கள் மரணம்

(கொழும்பு)

வெளிநாடுகளில்பணிபுரியும் காலத்தில் இறப்பவர்களில் பெண்களின் தொகை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் மாத்திரம் வெளிநாடுகளில் பணிபுரியும் காலத்தில் இறந்த 62 சடலங்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மார்ச் மாதத்தில் கொண்டு வரப்பட்ட 35 சடலங்களுக்குள் 29 பெண்களுடையவை என்றும், ஏப்ரல் மாதத்தில் 12 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்குமிடையில் இங்கு அனுப்பப்பட்ட 27 சடலங்களுக்குள் 21 பெண்களுடையவை என்றும் மேலும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இது குறித்து தெரிவிக்கையில் பெரும்பாலான இலங்கைப்பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரிகிறார்கள்.

அவர்களின் இறப்பு தற்கொலை, கொலை, விபத்து, நோய் என்பவற்றால் ஒவ்வொரு மாதமும் சம்பவித்து வருகிறது,

குவைத், ஜோர்தான், சவுதி அராபியா, லெபனான், மாலைதீவு, சிங்கப்பூர், கட்டார் முதலிய நாடுகளில் இலங்கைப் பெண்கள் பணிபுரிகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

நல்லூர் ... மாநகராட்சி ... யாழ்ப்...

## புனரமைப்பு

(காரைநகர்)

காரைநகர் கசூர்னா கடற்கரையில் உள்ள இலங்காபுரி ஆதி ஆஞ்சநேயர் ஆலயம் புனரமைக்கப்படவுள்ளது.

(உ-246)

## 19 வது ஆண்டு விழா

(காரைநகர்)

விளானை சனசமூக நிலைய 19 வது ஆண்டு இன்று பி.ப 3.00 மணியளவில் தலைவர் ஆ. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் கு.கணேசலிங்கம், வ.பி.போ சபை காரைநகர் சாலை முகாமையாளர் சி. சிவகுருநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-246)

# எமது செயற்பாடுகளுக்கு களங்கம் கற்பிக்க தவறான தகவல்களை சிலர் பரப்புகின்றனர்

## ப. அ. ச தலைவர் சிவபாதம் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவாளர்களின் மேம்பாட்டுக்காகவும், உற்பத்தியாளர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவுமே பனை அபிவிருத்திச் சபை பாடுபட்டு வருகின்றது.

எமது செயற்பாடுகளுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் முரண்பாடான தகவல்களைச் சிலர் பரப்பி வருவதையிட்டு நாம் மிகவும் மனக்கவலையடைகின்றோம்.

பனை அபிவிருத்திச் சபையின் யாழ். அலுவலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் எஸ். சிவபாதம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

திக்கம் வடிசாலையின் சகல உரிமைகளும் பனை அபிவிருத்திச் சபைக்கே உரியது.

இந்த வகையில் அதன் தரத்தை உயர்த்துவதற்கேற்ற நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சாராயத்தின் தரத்தை மேம்படுத்தும் வகையில், இந்தியாவில் இருந்து 160 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார் (உ-6)

## ஜனாதிபதிசந்திரிகா-அமைச்சர்ஜி.எல் பீரிஸ்

# ஏட்டிக்குப் போட்டியாக ஆதரவு தேடும் படலம் இந்தியாவில் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அரசாங்கம் மீது வீண் குற்றங்களைச் சுமத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை மட்டந்தட்ட முயல்கிறார் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்து விளக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அச் செய்திகள் தெரிவிப்பதாவது;

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தனது ஆதரவாளர்களுக்கும், தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் திட்டமிட்டு தொடர்ந்து நெருக்கடிகள் கொடுத்து வருவதாகவும் அவர்களைச் சிறையில் அடைப்பதாகவும் முறையிட்டார்.

அப்போது அமைச்சர் ஜீ. எல். பீரிஸும் இந்தியா சென்று அங்கு தங்கியிருந்தார். ஜனாதிபதி சந்தித்து மேற்கண்டவாறு முறையிட்ட அரசியல் தலைவர்களை அவரும் சந்தித்து ஜனாதிபதி சொன்னவை அத்தனையும் பொய் என்றும், இப்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை திசை திருப்பி மட்டந்தட்ட அவர் இப்படியொரு வழியைக் கையாள்கிறார் என்றும் விளக்கியுள்ளார்.

அத்துடன், குற்றவாளிகள் ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எமது அரசு சட்டத்தில் செல்வாக்கைப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கவில்லை என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி. சந்திரிகாவும் அமைச்சர் பீரிஸும் புதுடில்லியில் தாஜ் லஸ் என்ற ஹோட்டலில்தான் தங்கியிருந்தார்கள் எனினும், நேருக்கு நேர் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை.

(எ)

# இந்திய ஊடகவியலாளர் 20 பேர் இலங்கை வருவர்

(திருகோணமலை)

தற்போதைய அமைதிச் சூழலில் இலங்கையின் சமகால நிலையினைக் கண்டறியும் வகையில் இந்தியாவைச் சேர்ந்த 20 ஊடகவியலாளர்கள் விரைவில் இலங்கை வரவுள்ளனர்.

இவர்கள் கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மற்றும் மலையகப் பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர்.

(உ-3)

## அருகில் கொளுத்திப் போட்ட வெடியால் பீதியுற்ற பெண் மயக்க நிலையில்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த குடும்பப் பெண்ணின் அருகில் வெடி கொளுத்திப் போட்டதில், பிரஸ்தாப பெண் மயக்கமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மாகியப்பிட்டியைச் சேர்ந்த தங்கராசா ரஞ்சி (வயது 50) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வீதியில் சென்று கொண்டிருந்த வேளை இளைஞர் ஒருவர் வெடி கொளுத்திப்போட்டதில் பெண் திடீரென மயங்கி நிலத்தில் விழுந்துள்ளார்.

உடனே அருகில் நின்றவர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் பொலிஸிலும் முறைப்பாடு செய்ததாக தெரியவருகிறது.

(உ-7)

## சட்ட விரோத மது விற்பனை உரிமையாளர் மீது வழக்குத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்பொலிஸ்நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சடுதியாகமேற்கொண்ட தேடுதலின் போது அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கி வந்த மூன்று மதுபான விற்பனை நிலையங்களைக் கண்டு பிடித்து,

அவற்றுக்கெதிராக வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் மூன்றும், திருநெல்வேலிப் பகுதியில் ஒன்றுமே இவ்வாறு கண்டுபிடிக்கப் பட்டவையாகும்.

இதன் உரிமையாளர்களுக்கெதிரான வழக்குவிசாரணை எதிர்வரும் 8 ஆம் திகதிஇடம் பெறவுள்ளது.

(உ-19, 2)

# சமாதானக் கொடியை பாதகம் இல்லாமல் பறக்கவிடுங்கள்

## இந்தியாவின் காலைப் பிடித்து கேட்கிறார் அஸ்வர்

(கொழும்பு)

இப்போது பறக்கும் சமாதானக் கொடியை எந்தப் பாதகமும் இல்லாமல் பறக்க விடுங்கள்.

இந்தியாவையும், மற்றநாடுகளையும் நாம் கால்பிடித்து இதைத்தான் கேட்கிறோம்.

பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஜுனியர் விகடன் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானக் கொடியை பாதகம் இல்லாமல் பறக்க விடுமாறு நான் மட்டும் கேட்கவில்லை இங்குள்ள ஒட்டு மொத்த தமிழர்களும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழகத்தில் இருக்கும் அரசியல் தலைவர்கள் தங்கள் அரசியல் லாபத்துக்காக எப்போதுமே கையில் எடுக்கும ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தை இந்தச் சமயத்திலும் கிளப்பி எங்கள் எதிர்காலத்துடன் விளையாடாதீர்கள்,

விடுதலைப் புலிகள் விடயத்தில் இந்திய அரசு எடுத்துள்ள முடிவைமறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அமைச்சர் அஸ்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## வடக்கு-கிழக்கில் நீதிமன்றக் 'கட்டடங்களை திருத்த நடவடிக்கை

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியோடு வடக்கில் நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படவுள்ளதாகபிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் யுத்தம் காரணமாக அழிவடைந்த வடக்கு - கிழக்கிலுள்ள பல நீதி மன்ற கட்டடங்களும் அம்பாந் தோட்டையிலிருந்து கொழும்பு வரையிலான கரையோரப் பிரதேசங்களிலுள்ள பழுதடைந்த நீதிமன்றங்களும் திருத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-9)

# என்றும்இல்லாதவாறு கடந்த ஆண்டு இலங்கை பொருளாதாரம் வீழ்ச்சி

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

சுதந்திரம் பெற்றதிலிருந்து முதற்தடவையாக 2001 ஆம் ஆண்டில் அதிகரித்த பணவீக்கமும் பொருளாதார சமமின்மைகளும் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச்சென்றுள்ளதாக மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது'

அவ்அறிக்கையில்,கடந்த ஆண்டின் பொருளாதார வீழ்ச்சிகளுக்கு பல்வேறு காரணிகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

- வெளிநாட்டு அழுத்தங்கள்,உள்நாட்டு நிச்சயமற்ற தன்மைகள்,இயற்கை அழிவுகள்,ஏற்கனவே இருந்த அமைப்பு முறை நலிவுகள் இவற்றை சரிக்கட்டுவதில் ஏற்பட்ட தாமதங்கள்,
- செப்டம்பர் 11இல் அமெரிக்க நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களினால் இலங்கையின் உற்பத்திக்கானகேள்வியும்,வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளும் குறைவடைந்தமை.
- உள்நாட்டில் ஏற்பட்ட கடுமையான வரட்சியினால் விவசாய உற்பத்தி குறைவடைந்தது. இதனால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்தது இதனுடன் நீர்மின்வலு உற்பத்தி வீழ்ச்சி என்பனவும் காரணமாக அமைந்துள்ளன.
- மின் உற்பத்தி குறைவடைந்தமையால் பொருளாதார நடவடிக்கைகளிலும் தடங்கல்களை ஏற்படுத்தியிருந்தது.
- கட்டுநாயக்கா விமான நிலையத்தாக்குதலினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவு குறைவடைந்தமையினால் வெளிநாட்டு வர்த்தகமும் கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

இதேவேளை மொத்த உள்நாட்டு முதலீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கடந்த ஆண்டில் 4.2 வீதத்திலிருந்து 2.2 வீதமாகவீழ்ச்சியடைந்தும்,

2000 ஆம் ஆண்டில் 7.5 வீதமாக இருந்த தொழில் வாய்ப்பின்மை 7.8 வீதத்திற்கு அதிகரித்துள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-3)

## சித்தமருத்துவத்துறை மாணவர்கள் நேற்றுமுதல் வகுப்புக்கள் புறக்கணிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழ சித்த மருத்துவத்துறை மாணவர்கள நேற்றுமுதல் விரிவுரைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

பாடவிதானத்தில் உள்ள உள்ளக நோயாளர் கற்கை நெறியினை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தரிடம் மாணவர் ஒன்றியம் பலமுறை சுட்டிக்காட்டிய போதும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எதும் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்து இப்பகிஷ்கரிப்பு நடைபெற்று வருகிறது.

தமதுகோரிக்கைநிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என சித்த மருத்துவதுறை மாணவர்ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(உ-43)

## நிர்வாகசபை தெரிவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின நடப்பாண்டிற்கான நிர்வாகசபைத்தெரிவுக் கூட்டம் நாளை மு.ப 10.00 மணிக்கு முன்பள்ளி மூலவளப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது

(உ-19,2)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 09

## பகுதி I

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''

**கே.வி.குணசேகரம்**

**எம்.விக்னேஸ்வரன்**

**1ம், 2ம், 3ம் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

1. 

1) அரிதல் 2) அறுத்தல் 3) தறித்தல்

2. 

1) விவசாயம் 2) குளம் 3)மண்ணரிப்பு

3. 

1) தோட்டம் 2) உவர்மண் 3) வீடு

**கீழுள்ள மாதக் கலண்டரை அவதானித்து 04 –12 வரையான வினாக்களுக்கு விடை தருக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 5 | 12 | 19 | ■●▲ 26 |
| தி | | 6 | 13 | 20 | ■●▲ 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | ■●▲ 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | |

■ அரசாங்க விடுமுறை
● வர்த்தக விடுமுறை
▲ வங்கி விடுமுறை
| தொழிலாளர் தினம்
25 முகமது நபி பிறந்த தினம்
26 போயா தினம்
27 முழுமதி தினம்


4. இது எந்த மாதத்துக்குரிய கலண்டர்?
........................................................
5. இந்த மாதத்தின் முதலாவது வேலை நாள் எது?
........................................................
6. தொடர்ந்து மூன்று தினங்கள் விடுமுறையாகவுள்ளது இதில் பாடசாலை நாட்கள் எத்தனை?
........................................................
7. 6ம் திகதி விடுமுறையில் செல்லும் ஒருவர் 28ம் திகதி பாடசாலைக்குத் திரும்புகிறார் அவர் எடுத்த லீவு நாட்கள் எத்தனை?
8. இம் மாத்திற்குரிய பாடசாலை நாட்கள் எத்தனை?
9. அ.வ.வ விடுமுறை என்பதன் முழுவடிவம் என்ன?


**சரியான விடையைச் சுற்றி வட்டமிடுக**


10. அடுத்த மாதம் போயா வரும் திகதி (24, 22, 30)
11. அடுத்த மாதம் 7ம்திகதி என்ன கிழமை (சனி, புதன், வெள்ளி)
12. அடுத்த மாத்திலுள்ள தினங்கள் எத்தனை (31, 30, 28)


**பின்வரும் உருக்களில் முதல் உருவில் காட்டப்பட்டதற்குப் பிரதியீடாக உள்ள பொருளைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் பெட்டிக்குள் எழுதுக.**

13 


14 

15 


16 


17 

ஒரு சதுரம் 1cm நீளமும் 1cm அகலமும் கொண்டது






18. பரப்பளவில் மிகக் கூடிய உருவம் எது?
........................................................
19. சமமான பரப்பளவுடைய உருவம் எது?
........................................................
20. மிகக் குறைந்த பரப்பளவுடைய உருவம் எது?
........................................................
21. உருவம் C யினதும் B யினதும் மொத்தப் பரப்பளவு என்ன?
........................................................

22 



23. 


**மேலே தரப்பட்ட புள்ளிகளைக் கொண்டு 24 – 25 வரையான வினாக்களுக்கு விடை தருக.**




24. தேவி பெற்ற மொத்தப் புள்ளி எவ்வளவ்?
1) 180 2) 240 3) 280
25. கணிதத்துக்கு 100 புள்ளிகள் பெற்றவர்?
1) கிருபா 2) தேவி3) அருணன்
26. அருணன் தமிழுக்குப் பெற்ற புள்ளி?
1) 25 2) 80 3) 60
27. சுதன் சுற்றாடலுக்குப் பெற்ற புள்ளி?
1) 40 2) 80 3) 100
28. கணித பாடத்துக்குள் குறைவான புள்ளியைப் பெற்றவர்?
1) அருணன் 2) தேவி3) சுதன்




**ஒரு பாடசாலையின் நூல் நிலைத்திலுள்ள புத்தகங்களின் விபரம் மேலே தரப்பட்டுள்ளது. இதற்கேற்ப 29 – 34 வரையான வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

29) இந் நூலகத்திலுள்ள ஆங்கிலப் புத்தகங்கள் எத்தனை?
........................................................
30) எந்த மூன்று தொகுதிப் புத்தகங்களைச் சேர்த்தால் கணிதப் புத்தகங்களுக்குச் சமமாகும்?
........................................................
31) எந்த இரு புத்தகங்கள் சமமானவை?
........................................................
32) தமிழ்ப் புத்தகங்களில் 75 கழிக்கப்படுகின்றது அது எந்தப் புத்தகத் தொகுதிகளுக்குச சமமாகும்?

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



## இன்று ஒரு தகவல்

### அண்ணாவின் அழகு தமிழ்

ஈரோடு மாநாட்டுத் தீர்மானங்கள் என்ன என்று விளக்கிச் சொல்ல, அதன் தொடர்ச்சியாக சென்னையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் கூட்டப் பெற்றது. அதில் அண்ணா பேசினார். திரு. வி. க. வும் சொற்பொழிவு ஆற்றினார். அன்று அண்ணா பேசிய பேச்சு திரு வி. க. வை மிகவும் கவர்ந்து விட்டது. அதனால் மிகவும் ஈர்க்கப்பட்ட அவர் தமது பேச்சுக்கு நடுவே இப்படிக் குறிப்பிட்டார். 'இது வரை தமிழ் நாட்டில் என் எழுத்து நடையைப் பற்றிப் பெருமையோடு பேசிக்கொள்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இனி வருங்காலத்தில் அண்ணாதுரை நடை, அண்ணாதுரை தமிழ் என்று வரப் போகிறது. 'எதிர் காலத்தில் தமிழ்மொழி அழிந்து சிதைந்து போகுமோ என்று சஞ்சலமடைந்து வந்தேன். அதைக் காப்பாற்ற இதோ அண்ணாதுரை வந்துவிட்டார். இனி நான் அமைதியோடுசாவேன்.'

திரு வி. க. அப்படிச் சொன்னதைக்கேட்டு, மக்கள் கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கோடு ஆரவாரித்தது. தனயனுக்குத் திரு. வி. க. சூட்டிய பெருமையை அதே கூட்டத்தில் பெரியாரும் கண்டுகளித்தார். அதே கருத்தைக் கோவையில் ஜீ. டி-நாயுடுவின் இல்லத்தில் நடைபெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் வரவேற்றுப் பேசினார்கள். 'தமிழ் நாட்டில் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட எழுத்துக்கள் வரவில்லை. வளரவில்லை என்று சிலர் இங்கே குறைப்பட்டுக் கொண்டார்கள். மேனாட்டாரும் வியக்கும் வண்ணம் ஈரோட்டில் இருந்து ஒருவர் தமிழில் எழுதிவருகிறார். அவர் பெயர் அண்ணாதுரை அவரை ஏன் இந்த எழுத்தாளர் மாநாட்டுக்கு அழைக்காமற்போனோம் என்று வருத்தமாக இருக்கிறது. இப்படிப் பேசியவர் ரா. நா. என்னும் தமிழ் எழுத்தாளர்.

அதன் பிரதிபலிப்பாக சென்னை வால்டாக்ஸ் ரோட்டிலுள்ள ஒற்றை வாடைக் கொட்டகையில் நடைபெற்ற அடுத்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேச அண்ணா அழைக்கப் பெற்றார். பெ. தூரன் தலைமைவகித்த அம்மாநாட்டில் அண்ணா பேசிய பேச்சு, அரசியல் கலப்பில்லாதது. தமிழ் நாட்டின் சிறப்பை அவர் அழகுத் தமிழில் சுமார் முக்கால் மணி நேரம் பேசினார். மாநாட்டுப் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் அண்ணாவின் பேச்சை, கருத்தை, சொல் வளத்தைக் கேட்டுச் சொக்கிப் போனார்கள். முக்கால் மணிக்குள் முடித்துவிட்டாரே, மேலும் பேசி இருக்கக்கூடாதா?' என்று அவர்களின் நெஞ்சங்களில் ஒரு குறை இருந்தது. ஒற்றை வாடை மாநாட்டில் அண்ணா குறிப்பிட்டது நினைவிருக்கிறது.

'தமிழ் நாட்டில் இப்போதைய சிறுவர்களுக்கு ரேடியோவைக் கண்டுபிடித்தவர் யார் என்று கேட்டால் தெரியாது டெலிபோனை கண்டுபிடித்தவரைத் தெரியாது. ஆனால் எமனுக்கு என்ன வாகனம் என்று கேட்டால் உடனே 'எருமைக் கடா' எனப் பதில் சொல்லி விடுவார்கள். விஞ்ஞான உலக முன்னேற்றம் பற்றி நமது சிறுவர்கள் உணர்ந்து கொள்ளாமல் தேவையில்லாததைத் தெரிந்து வைத்திருக்கிறார்களே என்ற வேதனையை அவ்விதம் மிகச் சிறப்பாக, அனைவர் உள்ளங்களிலும் தைக்கும்படி அப்பொழுது அண்ணா பேசினார். அன்று அவர் பேசியது இன்றைக்கும் பொருத்தமாகத் தானே இருக்கிறது.

- நவீனன்

# 30 நாட்களுக்குள் மினி சினிமா அரங்குகளை மூடிவிட தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் இயங்குகின்ற மினிசினிமா கொட்டகைகள் அனைத்தையும் மூடிவிட வேண்டும்.

மாநகர சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக இயங்க உடன்படுகின்ற மினி சினிமா அரங்குகளை மாத்திரமே இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த செவ்வாய் முதல்வர் கந்தையன் தலைமையில்இடம்பெற்ற போது மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

மேலும்,

நடமாடும் சுகாதார சேவையில் 4 பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரி ஒருவர் 50 ஊழியர்கள் ஆகியோரை இணைத்துக் கொள்வதுடன்,

மாதத்தில் 2தடவைகள் நடமாடும் சுகாதார சேவையை நடத்துவது,

நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில், பெயர்ப் பலகைகளை அமைக்கும் போது வர்த்தகர்கள் மாநகர சபையின் அனுமதியைப்பெறுவது.

தீயணைப்புப் படையின் செயல் திறனை அதிகரிப்பதுடன், 18 பேர்கொண்டபடையணி ஒன்றை உருவாக்குதல் ஆகிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (உ-226,19,6)

### பயணம் செய்ய இராணுவ அனுமதி

விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கு மிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதை அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் சுதந்திரமாக நடமாடி வரும் இந்நாட்களில் குடத்தனை மணற்காடு அம்பன் பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் குடத்தனையில், உள்ள இராணுவ சோதனைச்சாவடியில் தமது அடையாளஅட்டையைச்சமர்ப்பித்து பயண அனுமதிச் சீட்டினைப் பெற்றுச் செல்லவேண்டியநிலைஇருந்து வருகிறது.

இதனால் பொதுமக்கள் சிரமங்களுக்குள்ளாகி வருகிறார்கள். (எ-42)

### மீளக் குடியேற்றக் கோரிக்கை

மட்டக்களப்பு கொக்காவெளியை அண்டிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், தங்களை மீளக்குடியேற்றுமாறு கோரி மட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

அப்பகுதியை அண்டிவாழ்ந்த சுமார் 100 குடும்பங்கள் கையொப்பம் இட்டு இம் மகஜரினை அனுப்பி வைத்துள்ளன. (உ)

### பாடசாலை செல்வதில் சிரமம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதி போக்கு வரத்திற்குத் திறக்கப்படாத காரணத்தால் மீளக்குடியமர்வதில் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் இப்போது பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

நாகர்கோவில் சோதனைச் சாவடியூடாக பொதுமக்கள் பிரயாணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாததால் மேற்படிபாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள்வடமராட்சியில் இருந்து முகமாலை, பளை, புதுக்காடு ஊடாகச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-42

### அமைச்சர்களுக்கான பாதுகாப்பை குறைக்க அரசு யோசனை

(கொழும்பு)

அமைச்சர்களிற்குபாதுகாப்பு வழங்கி வரும் பொலிஸ் அதிகாரிகளின் தொகையில் குறைப்பு செய்வது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து நாட்டில் சமாதானத்துக்கான அறிகுறிகள் தென்பட்டு வரும் இவ்வேளையில் அமைச்சர்களிற்கு அதிக பாதுகாப்பு அதிகாரிகள் தேவையில்லையென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைச்சர்களின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வரும் சுமார் 400 அதிகாரிகளை திருப்பி அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

### நீதிமன்ற உத்தரவின்பேரில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் 13 பேருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

பதின்மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் பதவி வழங்கப்பட வேண்டுமென்று மேன்முறையீட்டு நீதிமன்றம், பொது சேவை ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களம் நடத்திய பரீட்சைக்கு தோற்றிய பின்னும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்னரும் பதின்மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் பதவியுயர்வு வழங்கப்படாதிருந்தனர்.

இதனை எதிர்த்து சம்பந்தப்பட்டவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மனுவொன்றைத் தாக்கல்செய்திருந்தனர். அம்மனுவில், தம்மைவிட மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றவர்கள் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களாக நியமிக்கப்பட்டுவிட்டனரென்றும் அவ்வாறு பதவியுயர்வு வழங்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானதென்றும் தெரிவித்திருந்தனர்.

இம்மனு மீதானவிசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதியரசர் காமினி அமரதுங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டபோதே மேற்படி உத்தரவு வழங்கப்பட்டது.

இவ்வுத்தரவுகளைப் பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் இந்த நியமனங்கள் உடனடியாக வழங்கப்படவேண்டுமென்று பொலிஸ்மா அதிபருக்கும், பாதுகாப்புஅமைச்சின் செயலாளருக்கும் உத்தரவு பிறப்பித்தார். (உ)

### மண்ணெய் அருந்திய குழந்தை மருத்துவமனையில்

(மந்திகை)

சோடாப் போத்தலினுள் இருந்த மண்ணெண்ணெயை அருந்திய குழந்தை பாதிக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளது.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த ஜெ. ஜெயசிந்தியா (வயது-3) என்ற குழந்தையே இவ்வாறு தவறுதலாக மண்ணெண்ணெயை அருந்தியுள்ளது. (உ-23)

### குழந்தையின் கால் முறிவு

(மந்திகை)

ஓடிக்கொண்டிருந்தலாண்ட் மாஸ்ரரில் ஏற முற்பட்ட குழந்தை தவறி விழுந்து சில்லில நசியுண்டு கால முறிவடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளது.

புலோலி தெற்கு சூசையப்பர் கோயிலடியைச் சேர்ந்த ம. நிருஜன (வயது-3) எனற குழந்தையே கால முறிவடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளது. (உ-23)

## திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் 5 நிலைகளையும் பெற்ற மாணவர்களின் விபரங்கள் தரங்கள் ரீதியாக வருமாறு,

தரம்-3

எஸ்.நிரோஜன் பரியோவான் கல்லூரி, எஸ்.அர்ச்சனா உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி, ஜெ.ஜானகி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, எஸ்.சேயோன்பரியோவான் கல்லூரி, வி.சபஸ்திகா இந்து மகளிர் ஆர.பாடசாலை

தரம்-4

இ.தபிரா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி, செ.அர்ஜுன் கொக்குவில்இந்து ஆர. பாட, சி.பிரகாஷ் கரந்தன் இராமுப்பிள்ளை வித், ம.விதுர்ஷாகொக்குவில் ஆர. பாடசாலை, பு. மயூரிசென். ஜோன் பொஸ்கோ வித்தி

தரம். 5

ஜெ.அபிரா- கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, பா.மொசிதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி, கோ. ஜெகார்த்தன்- புனித பத்திரிசியார் கல்லூரி, ம.மயூரதி- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை, உ.பிரியங்கா- கோண்டாவில் சி.சி.த.க. பாட.

தரம். 6

ஞா.சங்கீதா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மு.கஜித்தா உயரப்புலம்மெ.மி.த.க.பாடசாலை, அ.விருபநாத்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி, ஜெ. மாதங்கனி-இந்துமகளிர் கல்லூரி, சி.சமீரா- ஆவரங்கால் நடராஜ ராமலிங்கவித்தி

தரம். 7

கிறேஸ் கயசின் கென்ஸ்மன்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, தி.உமாப்பிரியா- இந்து மகளிர் கல்லூரி, வி.நித்தியா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி, ம.விதுசாளினி இந்து மகளிர் கல்லூரி, சி.கம்சா கரந்தன் இராமுப்பிள்ளைவித்

தரம் 8

செ. குணாளினி- கனகரத்தினம் ம. ம.வித்தி.ச.பைரவி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இ. சோபிகா - வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி. சா. இரஞ்சிதா- கனகரத்தினம் ம.ம.வித்தி, பூ.நிரோஜா புனித மரியாள் வித்தி,

தரம் 9

இ. தர்ஷிகா- இந்துமகளிர் கல்லூரி, இ. சுபா - சுண்டுக்குளிமகளிர்கல்லூரி, பா.துளர்சிகா- நடராஜ இராமலிங்க வித்தி, அ. வினுதிகா - அச்சுவேலி மத்திய கல்லூரி ம. பிபோஜனா- இந்துமகளிர் கல்லூரி.

தரம் 10/11

பா. சிஷாந்தன் - இந்துக் கல்லூரி, பே. திவ்வியா- வேம்படி மகளிர்கல்லூரி, பு.ஜவிதா கோப்பாய் மகாவித். ம. மிதுனா - கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி. த. ஸ்தெலா தர்சிகா- திருக்குடும்ப கன்னியர் மடம்

தரம் 12/13

அ. சிவகஜனி- இந்துமகளிர் கல்லூரி, அ.மைக்டொனால்ட் புனித பத்திரிசியார் கல்லூரி. ச. பல்லவகுமரன்- அச்சுவேலி மத்திய கல்லூரிவி. மேரி ஜெனித்தா-அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரி, சா. ரோஜிதா-சுண்டுக்குளிமகளிர் கல்லூரி. (உ)

### சிந்தனைக்கு விருந்து

**சர்வதேசப் பொலிசு!**

ஆப்கானிஸ் தானத்தில் ருஷ்யா முன்னர்
ஆதிக்கம் கொண்டபோ தங்குப் பொம்மை
வார்ப்பினிலே நிலக்கண்ணி வெடிகள் வைத்து
வளர்கின்ற சிறுவர்களை வதைத்தார் என்றே
நாப்புழுக்க வசைபாடிக் கண்டித் திட்டு
நகையாடி வந்தஅமெரிக்கா இன்று
சாப்பெரிய கொடுமைகளை அங்கி ழைத்தல்
சர்வதே சப்பொலிசு தான்தான் என்றோ?

- பழையவன்

# சமாதான சூழலை தவறவிட்டால் நாடு ஏகாதிபத்திய சக்திகளால் அபகரிக்கப்படும்

## மேதின கூட்டத்தில் சி. கா. செந்தில்வேல் உரை

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் சிந்திய இரத்தத்திற்கு கௌரவமான உறுதியான அரசியல் தீர்வு அவசியம். அதை எட்டுவதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இன்றைய சமாதானச் சூழல் மலர்ந்துள்ளது.

இந்த இறுதிச் சந்தர்ப்பம் நழுவவிடப்படுமாயின் முழு நாடும் ஏகாதிபத்திய சக்திகளால் அபகரிக்கப்பட்டு விடும்.

கடந்த 20 வருடங்களில் விடுதலைப் போருக்காக சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது உயிரை இழந்திருக்கிறார்கள். எனவே மக்கள் சுதந்திரமாக, ஜனநாயகப் பண்புடன் தூரநோக்குடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் கட்சியின் மேதின கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.ச. நடுவப்பணியகத்தில் கட்சியின் வட பிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

உலக மக்கள் தமது விடுதலைக்காக உரிமைகளை வென்றெடுப்பதற்காக உறுதி பூண்ட மேதினம் யாழ்ப்பாணத்தில் புதிய சூழலில் இன்று கொண்டாடப்படுகின்றது.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின் துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கும் நேரத்தில் இத்தினம் முக்கியத்துவம் பெறுகிறது.

வெறுமனே சடங்கு சம்பிரதாயங்களுக்காக மாத்திரம் பிரச்சினைகளை முன்வைத்துப் போராடியவர்களோ, யாருக்கும் துரோகம் செய்து குறுகிய அரசியல் இலாபங்களை ஈட்டியவர்களோ, விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இருந்தவர்களோ, அரசுகளுக்கு வால் பிடித்து பதவிகளைப் பெற்றவர்களோ அல்ல நாம்.

இந்த மண்ணில் எமக்கென்றொரு வரலாறு இருக்கிறது. உண்மைக்காக நீதிக்காக சாதி ஒடுக்குமுறைக்காக தொழிலாளர் வர்க்கத்தின் விடு தலைக்காக குரல் கொடுத்த அரசியல் வரலாற்றைக் கொண்டது எமது கட்சி.

இன்று சமாதானம் பேசுவதால் ஐ.தே. கட்சி ஆதிக்கம் முற்றும் துறந்த புதிய கட்சியல்ல. அது தனது நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ இயல்பை இழந்துவிடவில்லை.

இந்த நேரத்தில் மக்கள் தெளிவாக இருக்கவேண்டும். தெற்கு அந்நியக் கொம்பனிகளுக்கு அடிபணிந்துவிட்டது. வடக்கு-கிழக்கிலும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் உறுதிபூண்டிருக்கிறதுஎனவே போராட்டம் என்பது அடக்குபவன் ஆள்பவன் இருக்கும் வரை அடக்கப்படுபவனாலும் ஒடுக்கப்படுபவனாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்,

தமிழ் மக்கள் தேசிய ரீதியில் ஒன்றிணைந்தாலும் சமூக ஏற்றத் தாழ்வு சாதிப்பிரிவினைகளை எவ்வாறு கையாளப் போகின்றோம் என்ற வினா எழுகின்றது.

தாயகம்ஆசிரியர் க. தணிகாசலம் பேசுகையில்,

ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடிவுக்காக தேர்ந்தெடுத்த போராட்ட மார்க்கம் என்றும் தோல்வியடைந்ததில்லை ஒடுக்கு முறைக்கு எதிராக மக்கள் கைகட்டி வாழ முடியாது என்பதை போராட்டங்கள் எமக்குஉணர்த்திநிற்கின்றன.

ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டும்உலகமயமாக்கல் என்ற மாயைக்குள்ளும் அவை நசுக்கப்படுகின்றன. அதேவேளை கணனியுகத்தில் சமூக மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்று புத்தி ஜீவிகள் சிலர் பொய்மையான வாதத்தை முன்வைத்து வருகிறார்கள்.

இது தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டி வாழ்வதற்கு முதலாளித்துவ சக்திகளுக்கு கிடைத்த ஒரு யுத்தியாகும். இதை தொழிலாளர் வர்க்கம் எதிர்த்து போராடவேண்டும் என்றார்.

கட்சி உறுப்பினர்களான மு.தியாகராசா எஸ்.ஆனந்தகுமாரசாமி எஸ்,தவராசா ஆகியோரும் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

(உ.106,6)

### உருவாகும் சமாதானம்

# உழைக்கும் வர்க்கத்தின்பாதுகாப்பை உறுதி செய்வதாக இருக்கவேண்டும்

## மேதினக் கூட்டத்தில் தோழர் தவராசா

(யாழ்ப்பாணம்)

தற்போது சமாதானத்திற்கான அறிகுறிகள், தெளிவாகத தென்படத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு உருவாகும் சமாதானம் உழைக்கும் வர்க்கத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.

வடபிராந்திய தொழிற் சங்கங்களின் ஐக்கிய மேதினம் கடந்த புதன் கிழமை யாழ். சிற்றி மண்டபத்தில் இடம்பெற்றபோது, தலைமையுரையாற்றுகையில், வடபிராந்திய தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் தோழர் இ. தவராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

காலத்திற்குக் காலம் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் சிங்கள அரசுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவத் தன்மை கொண்டனவாக உள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைப் பேணும் விதமான செயற்பாடுகளை அரசுகள் செய்யத்தவறி வருகின்றன இதனால் பொருளாதாரத்தினையே தாங்கிக் கொண்டிருக்கும் பாட்டாளி மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அநுபவித்து வருகின்றனர்-

தற்பொழுது யுத்தசூழ்நிலை அகல்வதை அடுத்து தென்னிலங்கையில் காணப்படும் முதலாளித்துவ சக்திகளின் படையெடுப்பு அதிகரித்து வருகின்றது.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டவுடன் வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் குடாநாட்டில் மேற்கொள்ளப் படவிருக்கின்றன. இந்நிலையில் வேலைவாய்ப்பு என்ற பெயரில் குடாநாட்டு இளைஞர்களின் உழைப்பு சுரண்டப்படவுள்ளது.

வட பகுதி மக்களைப் பொறுத்தவரை போரினால் பெருமளவும் பாதிக்கப்படுவது பாட்டாளி மக்களே ஆகும். இதனைஅரசு நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். யாழ். குடாவில் உழைக்கும் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பல தடவைகள் அரசிற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால் அரச அதிகாரிகள் பாட்டாளி மக்களின் பிரச்சினைகள் பற்றி கண்டுகொள்வது இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகின்றது.

உலக நாடுகளின் உலகமயமாக்கல் கொள்கைகளின் தாக்கமும் எமது நாடுகளில் எதிரொலிக்கின்றது. எனவே இந் நிலையில் அரசும் பாட்டாளி மக்களின் நலன் கருதி விழிப்புணர்வோடு செயலாற்ற வேண்டும்என்று குறிப்பிட்டார். (உ-19,2)

# சகல இனமக்களும் சமத்துவத்துடன் சந்தோசமாக வாழ வேண்டும்

## மேதின உரையில் புலிகள் அரசியல் பிரமுகர் எழிலன்

(வவுனியா)

தமிழ்மக்களுக்கு நல்ல தீர்வை வழங்கும் வகையில், தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை அரசு உரியமுறையில் பயன்படுத்தவேண்டும் என்று வவுனியா பிராந்திய விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவு முக்கியஸ்தர் எஸ். எழிலன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர்அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஒரு சுமூகமான சூழல் ஏற்பட்டு சகலஇன மக்களும் சமத்துவத்துடனும் சந்தோஷத்துடனும் வாழவேண்ம்.

நாங்கள் போர் வெறியர்களுமல்லர் ஆயுதபிரியர்களுமல்லர்.

இந்தநாட்டில் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்குமேயானால் முதலில் சந்தோசப்படுவது விடுதலைப் புலிகளே.

எமது மக்களின் நல்வாழ்வுக்காகவே நாங்கள் போராடுகின்றோம் இதற்குரிய தீர்வை அரசு வழங்கும்என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்று தெரிவித்தார். (உ-9)

# மேதின ஊர்வலத்தில் ஜெயாவின் கொடும்பாவி

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட காரைதீவில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டுள்ளது.

மேதின ஊர்வலத்தின் போது ஜெயலலிதாவின் கொடும்பாவி இழுத்துச் செல்லப்பட்டு, காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயச் சந்தியில் வைத்து, கண்டித்துக் கோஷங்கள் எழுப்பப்பட்டபின், கொளுத்தி எரிக்கப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உரையாற்றுகையில் தமிழர் அல்லாத ஒருவர் தமிழ் நாட்டிலே முதல் அமைச்சராக இருப்பதுஒரு அவமானம்.

மறைந்த எம்.ஜி. ஆரின் மதிப்பைப் பெற்ற, எமது தலைவர் வே.பிரபாகரனை ஜெயலலிதா அவமதிக்கிறார் என்றும் கூறினார். (உ-9)

## லக்ஷார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த லக்ஷார்ச்சனையும் சங்காபிஷேகமும் இன்று காலை நடை பெறும் (உ-9)

## பள்ளிவாசல்களை புனரமைக்க உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்களை புனரமைக்கவும் முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்குதேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க உதவி புரியுமாறும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் பஹ்ரைனில் உள்ள அரபு தனவந்தர்களை கோரியுள்ளார். (உ-3)

## சுவிசேஷ சுகமளிக்கும் ஆராதனை

(அரியாலை)

யாழ். கண்டி வீதி சுண்டுக்குளியில் அமைந்திருக்கும் இலங்கை பெந்தேகொஸ்தே சபையின்வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ சுகமளிக்கும் ஆராதனைகளும் கடந்த வாரம் 4தினங்கள் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில், தென்னிலங்கையைச்சேர்ந்தசிங்கள மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு ஆராதனையில் ஈடுபட்டனர்.

கொழும்பு, நீர்கொழும்பு, ஜாஎல, மட்டக்குளி, நுவரெலியா, இரத்தினபுரி, புத்தளம், மன்னார் ஆகிய இடங்களில் இருந்தும் மேற்படி கூட்டு ஆராதனைக்கு சமூகம்அளித்திருந்தனர். (உ- 225)

## சந்தையை இயக்கக் கோரிக்கை

(அரியாலை)

அரியாலை புங்கன்குளம் வீதியில் சந்தை அமைப்பதற்காக முன்பு தொடங்கப்பட்ட வேலைகள் ஸ்தம்பித்திருப்பதால் மீண்டும் அவ் வேலைகளை ஆரம்பித்து சந்தையைப் பூர்த்தி செய்யுமாறு அரியாலை சனசமூகநிலையம் யாழ்.மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையனைக் கோரியுள்ளது-

அரியாலை தபாற்சட்டைச் சந்தியில் உள்ள சந்தை இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதால் இப்போதுஇயங்க முடியாத நிலையில் உள்ளது இன்நிலையில் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால் ஒருசந்தை அவசியமாக உள்ளது.

எனவே மேற்படி சந்தைக் கட்டடத்தை பூர்த்திசெய்து சந்தை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு மேலும்அக் கோரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-225

# ஒரே குடும்பத்தவர் மூவர் தீயில் கருகி மரணம்

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் கிருதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற பவிபத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் உடல் கருகி மரணமடைந்துள்ளனர்.

மோட்டார் உதிரிப்பாகங்கள் மற்றும் எரிபொருள் விற்பனை நிலையத்துடன் இணைந்திருந்த வீட்டில் அடுப்பைப் பற்ற வைக்க முயன்றபோதே இத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. (உ-2)

‘வெடிவால்களின்’ விஷமத்தால்

# படிக்க முடியாது பரீட்சார்த்திகள் குழப்பம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை விதானையார் வீதிப் பகுதியில் இளைஞர்கள் கூட்டமொன்று தொடர்ச்சியாக பட்டாசு கொளுத்துவதில் ஈடுபடுவதால் அப்பகுதியை அண்டி வசிக்கும் நோயாளர்களும் பரீட்சார்த்திகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களது இச் செயற்பாடு குறித்து யாரும் அதிருப்தி தெரிவித்தால் அவர்கள் மேலும் அதிகமாக வெடி கொளுத்துவதில் ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இது இவ்வாறிருக்க இரவு வேளைகளில் சில இளைஞர்கள் சைக்கிள்களில் திரிந்து வீடுகளினுள்ளும், பயணம் செய்யும் வாகனங்களின் முன்னும் வெடி கொளுத்தி வீசுவதில் ஈடுபடுகின்றனர்.

இதனால் இளைஞர் கோஷ்டிகளிடையே முரண்பாடுகள் ஏற்படுவதையும் இவை கைகலப்பு வரை செல்லக் கூடிய அபாயம் இருப்பதாகவும் மக்கள் அஞ்சுகின்றனர். (உ-59)

மாநகராட்சி மன்றம்

.......................................................

33) நூலகத்திலுள்ள மொத்தப் புத்தங்கள் எத்தனை?

.......................................................

34) தமிழ்ப் புத்தகங்களில் 125 புதிதாகக் கொள்வனவு செய்யப்படுகின்றது. 75 விஞ்ஞானப் புத்தகங்களும் 15 சமயப் புத்தகங்களும் கழிக்கப்படுகின்றன. இப்பொழுது நூலகத்திலுள்ள புத்தகங்கள் எத்தனை?

.......................................................

**பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சி நிரல் ஒழுங்கின்றித் தரப்படுகின்றது.**

1) நன்றியுரை 2) இடைவேளை 3) அணி நடை
4) கடவுள் வணக்கம் 5) போட்டிகள் ஆரம்பித்தல் 6) பரிசு கொடுத்தல்.

35. இதைச் சரியாக ஒழுங்குபடுத்தினால்
1) 4, 3, 5, 2, 6, 6, 2) 1, 3, 5, 2, 4, 6,.
3) 4, 3, 5, 2, 1, 6 4) 1, 2, 5, 4, 3, 6

36. கமலனிடம் உள்ள இனிப்பை விட மூன்று மடங்கு இனிப்பு சுதனிடம் உண்டு. அருணிடம் எட்டு இனிப்புக்கள் உண்டு. மூவரிடமும் 16இனிப்புக்கள் உண்டு. கமலனிடமுள்ள இனிப்புக்கள் எத்தனை?

.......................................................

37. வருண் சுதாகரை விட வேகமாக ஓடுவான் திலீப் சுதாகரை விட வேகமாக ஓடுவான் கார்த்திக், திலீப் வருணையும் விட வேகமாக ஓடுவான் கரன் கார்த்திக்கை விட வேகமாக ஓடுவான். பந்தயத்தில் முதலாவதாக வருபவர் யார்?

.......................................................

38. ஒரு மீற்றர் தூரத்தை ஒரு நத்தையை விட மண்புழு மூன்று நிமிடங்கள் குறைவாகச் செல்லும் 5மீற்றர் தூரத்தை மண்புழு 25 நிமிடங்களில் சென்றால் நத்தை எத்தனை நிமிடங்களில் செல்லும்?

.......................................................

**தரப்பட்ட வாக்கியத்திற்கு பொருத்தமான நிகழ்வின் கீழ் கோடிடுக.**

39. அவர் கூறி முடிந்ததும் சபையோர் எழுந்து சென்றனர் அவர் கூறியது
1) புத்திமதி 2) நன்றியுரை 3) தேவாரம்

40. பச்சை விளக்கு எரிந்ததும் தரித்து நின்ற வாகனங்கள்
1) புறப்பட்டன 2) பின்னால் சென்றன 3) திரும்பிச் சென்றன.

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்.

| | |
|---|---|
| 01. 7.06 | 36. 1 |
| 02. 35நிமிடம் | 37. 2 |
| 03. 1மணி 25நிமிடம் | 38 - 41 பொருத்தமான கருத்துடைய வசனங்கள் |
| 04. 30நிமிடம் | 42. நல்லவன் |
| 05. தவில் | 43. சேர்தல் / கட்டிப்பிடித்தல் |
| 06. நாதஸ்வரம் | 44. நிழல் |
| 07. 19.45 | 45. நாம் |
| 08. திங்கட்கிழமை | 46. ஆசிரியர் |
| 09. 18 | 47. அதிபர் |
| 10. 9மணி 05நிமிடம் | 48. 2 |
| 11. 45 நிமிடம் | 49. 1 |
| 12. NEWSSINHALA | 50. 3 |
| 13. Sports News | 51. 1 |
| 14. TAMIL DRAMA | 52. 2 |
| 15. 5.00 | 53. 1 |
| 16. 6.15/9.00 | 54. மகரம் |
| 17. 7.40 | 55. 1வாரம் |
| 18. 103 | 56. வாய்ப்புண் |
| 19. 98 | 57. வியாபாரம் |
| 20. நடத்துனர் 7 சாரதி 2 | 58. 8ம் 9ம் திகதி |
| 21. 3159.00 | 59. 6ம் 7ம் திகதி |
| 22. 59 | 60. புதன். வியாழன் |
| 23. 1952 | 61. R |
| 24. திங்கள் | 62. W |
| 25. 1227 | 63. W |
| 26. 12 864 | 64. இல்லை |
| 27. 26 | 65. இல்லை |
| 28. 59 | 66. இல்லை |
| 29. 88 | 67-70 பொருத்தமான நிறங்கள் |
| 30. 4324.00 | 71. 2 |
| 31. சூரியஒளி மூலம் | 72. 3 |
| 32. வாழைப்பழம் | 73. 1 |
| 33. வாழைப்பழம் | 74. 1 |
| 34. 2 | 75-80 பொருத்தமான வாக்கியங்கள் |
| 35. 3 | |

குறிப்பு:
**விடைகளைவேறு தாளில் எழுதி 06.05.2002 இற்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.**

**கல்விப் பகுதி**
**வினாத்தாள் 09**

''வலம்புரி''
இல: 15,வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்:- ..........................................
சொந்த முகவரி:- ..........................................
கற்கும் பாடசாலை:- ..........................................

**இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்**

## தரம் 05 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள்08 பகுதி II இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

1) வ. நிரோஷான், யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.
2) பு. கோபிநாத், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை.
3) ம. வருணபாலன், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
4) ற. பிரியதர்ஷினி, யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலசாலை.
5) பொ. சுவேதினி, யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை.
6) பி. யோபிதா, யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை.
7) செ. ஜெகப்பிரியா, சென் ஜோன்ஸ் பொஸ்கோ.
8) ப. சதாசினி, யா/வல்வை சிவ்குரு வித்தியாசாலை.
9) பா. சிறிகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி.
10) பி. நந்தினி, வ.ம.ம வித்தியாலயம்.
11) வே. ஜெயவதனி, கமலாசனி வித்தியாலயம்.
12) இ. மதனிகா, யா/விநாயகர் வித்தியாலயம்.
13) தி. துஷாரா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
14) ம. பகீரதன், யா/றோ.க.த.க.பாடசாலை.
15) செ. அனுதர்ஷா,நெல்லியடி மெதடிஸ்த மிசன் த.க பாடசாலை.
16) அ. கரிகாலன், யா/குடும்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
17) ஜெ. நரேஷ், கோ/இந்து மகா.வித்தியாலயம்.
18) ச. கணேஸ்பரன், யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
19) மோ. சஞ்சலன், யா/மத்திய கல்லூரி.
20) பி. ஜோதிகா, யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை.
21) த. ஜனந்தினி, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
22) க. உதயராஜ், யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
23) ம. ஜீவிதா, யா/சாவ. இந்து ஆரம்ப பாடசாலை.
24) கு. நிஷாகரன், தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
25) ச. நிறோசன், யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.
26) அ. ஜெறிஜோன்சன், யா/மத்திய கல்லூரி.
27) பி. ஜோனிஸ்சூரே, சென்.ஆன்ஸ்.
28) வி. அனுசியன், யா/மத்திய கல்லூரி.
29) க. பிரியங்கா,யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
30) செ. சிந்துஜா, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.
31) செ. யசோகா, முருகமூர்த்தி வித்தியாசாலை.
32) க. கஜீபராஜ், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
33) க. வாகீசன், யா/புனித ஜோன் பொஸ்கோ.
34) ப. வானதி, யா/நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை.
35) க. திவ்வியா, நாவலர் பாடசாலை.
36) த. பிரணாளன், யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
37) ஸ்ரீ. பிரவீணா, யா/இந்து ஆரம்ப பாடசாலை.
38) இ. நிசாந், யா/தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை.
39) சு. சமீரா, யா/உ.சை.த.வி.
40) சோ. சிந்துகேயன், யா/மத்திய கல்லூரி.
41) ந. கௌசிகா, யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி.
42) கெ. மயுன், யா/மத்திய கல்லூரி.
43) வை. மதுவந்தி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
44) சி. கண்ணன், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
45) த. கோகுலன், அட்டகிரி சைவ வித்தியாசாலை.
46) வி. தீபன்ராஜ், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
47) லோ. கஜீவன், யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
48) க. கஜரூபன்,யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
49) த. அஜந்தன், யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
50) க. விஷ்ணுப்பிரியா, யாழ்ப்பாணக் கல்லூரி.
51) கு. கோபிகா, திருநாவுக்கரசு ம.வி.
52) ச. திபாகர், யா/இந்து ஆரம்ப பாடசாலை.
53) தி. கஜந்தன், யா/தியாகராசா ம.ம.வி.
54) நி. பகீகரன், யா/சங்குவேலி அ.த.க பாடசாலை.
55) சு. தசாங்கன், யா/ஏழாலை மகா வித்தியாலயம்.
56) சி. ஜனகன், பரியோவான் கல்லூரி.
57) நா. பிரகதீஸ்வரசர்மா, நாவலர் வித்தியாலயம்.
58) பா. ஷண்முகப்பிரியா, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
59) க. கபிலேஸ்வரி, யா/நா.றோமன் க. வித்தியாலயம்.
60) யோ. அசாத், யா/அளவெட்டி றோ.க.த.க பாடசாலை.
61) நி. பகீர்த்தன், யா/கோ.வ.றோ.க.த.க. பாடசாலை.
62) கு. தமிழ்மதி, யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.
63) க. வர்ஷனா, இருபாலை சீ.சீ.த.க பாடசாலை.
64) ரா. வர்ணிகா, யா/இந்து ஆரம்ப பாடசாலை.
65) வ. லக்ஸ்பன், சென்ற் ஆன்ஸ்.
66) மு. கிருசன், யா/நா.றோமன் க. வித்தியாலயம்.
67) ந. நிதர்ஷன், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.
68) க. கீர்த்திகா, யா/காசிநாதர் வித்தியாலயம்.
69) ப. குபேரன், விசாலாட்சி வித்தியாசாலை.
70) க. தர்சிகன், யா/மத்திய கல்லூரி.
71) ஸ்ரீ. தருசன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
72) கு. சுமங்கலி, யா/சைவப்பிரகாச வித்தியாசாலை.
73) வ. செல்வகுமரன், கைதடி குருசாமி வித்தியாலயம்.
74) க. லக்ஷிகா, யா/து.மெ.மி.த.க பாடசாலை.
75) தி. ஜிந்தூரகன், யாழ் புனித பொஸ்கோ.
76) கா. திவேயல், யா/ஏழாலை மகா வித்தியாலயம்.
77) யோ. பிரதாப், சென் பீற்றேர்ஸ்.
78) ம. ஜெஸ்மினா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
79) இ. தர்சியா, யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
80) த. வஜீதா, விவேகானந்தா.
81) க. மயூரன், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
82) க. மதுமதி, யா/தேவரையாளி இந்துக் கல்லூரி.
83) ரா. நிரூஷிகா, யா/இந்து ஆரம்ப பாடசாலை.
84) வி. கிரிஜா, யா/நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை.
85) செ. கோபிகா, யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
86) ம. கஜலக்ஷி, யா/கொ.இ.ஆ.பாடசாலை.
87) நா. பிரகாஷ், காசிப்பிள்ளை வித்தியாலயம்.
88) செ. நிரோஜன், சீ.சீ.த.க பாடசாலை.
89) இ. விதுசன், யாழ் மத்திய கல்லூரி.
90) கோ. கவிதாஸ், இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
91) த. துவாரகன், கொ.இ.ஆ. பாடசாலை.
92) ஆ. பிரியந்தினி, யா/ஏழாலை மகா வித்தியாலயம்.
93) மா. சிவசுதன், கோண்டாவில் சீ.சீ.த.க பாடசாலை.
94) யோ. கஜீந்தன், நாவலர் வித்தியாலயம்.
95) ப. சோபியா, யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
96) ப. ஆரணி, யா/தா.இ.த.க. பாடசாலை.
97) தி.சிந்துஜன், யா/இந்து ஆரம்ப பாடசாலை
98) ச.கஜந்தன், துன்னாலை மெ.மி.த.க பாடசாலை.
99) ம.நிகிந்தன், யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி
100) ப.மதுசாந், தமிழ்க் கந்தையா வித்தியாலயம்
101) ப.சயந்தன், யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
102) ஜோ.சன்யுதா, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
103) ஆ.பவித்ரா, யா/கொற்றவத்தை அ.மி.த.க பாடசாலை
104) மு.யமீலா, யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்
105) பே.கோபிதா், பளை மத்திய கல்லரி
106) அ.கோபிநாத், கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க பாடசாலை
107) ச.சத்தியராஜ், யா/கொக்குவில் சீ.சீ.த.க.பாடசாலை
108) க.லிதர்சன், யா/விநாயகர் வித்தியாலயம்
109) த.துவாரகன், யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
110) எம்.ஜோண்பிறியாந், யா/பரியோவான் கல்லூரி
111) ம.நிவந்தன், மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை
112) மு.குணாதரன், யா/காசிநாதர் வித்தியாலம்
113) சி.கனூஜன், யா/பரியோவான் கல்லூரி.

## இலங்கைச் சமாதானத்துக்கு சாதகமாக

# இந்திய வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க கோருகிறார் வை. கோ.

(சென்னை)

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சு வெற்றி பெற உதவிடும் வகையில் இந்திய வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி ஈரோட்டில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை ஏற்று இலங்கை அரசுதரப்பிலும் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டு ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்வகையில் இரு தரப்புக்கும் இடையே பேச்சு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் முன்னாள் பிரதமர் இந்திராகாந்திக்குப் பிறகு இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இந்தியரசு கடைப்பிடித்துவரும் தவறான வெளியுறவுக கொள்கையைக் கைவிட வேண்டும் என்று தெரிவித்தார். (உ)

## சதாமைப் பதவி கவிழ்க்க அமெரிக்கா முயலவில்லை

ஈராக்கிய ஜனாதிபதி சாதம் ஹுசேனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா முயற்சி செய்யவில்லை என வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஈராக் மீது படை யெடுத்து சதாம் ஹுசேனை ஆட்சியிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறது என நியூ யோர்க் ரைம்ஸ்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதனை மறுத்தேவெள்ளை மாளிகை மறுப்பறிக்கை விட்டுள்ளது.

இதேவேளை சதாம் ஹுசேனின் பிறந்ததினத்தை ஈராக்கியர்கள் கொலனித்துவத்திலிருந்து விடுபட்டமையைக் குறிப்பதாகவே கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## பால் ஆலய

உலகமெங்கிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் ஏற்ற ஒரு நிறையுணவாகவும், பிணியகற்றும் அருமருந்தாகவும் பயன்பட்டு நிற்பதையும் காணலாம். 87வீதமான நீரையும், 3. 4வீதமான புரதச் சத்தையும், 4.6வீதமான பால் வெல்லத்தையும், 1. 1 வீதமான கனியுப்பையும், கொண்டதாக, எளிதில் சமிபாடடையக் கூடியதாக, விளங்கி, வயது வேறுபாடின்றி, நோயாளி சுகதேகி என்ற பாகுபாடின்றி, அனைவரும் அருந்துவதற்குகந்ததான பாலினைத் தனியாகவோ அன்றிவேறுபொருட்களுடன் கலந்து மருந்தாகவோ அருந்துவதன் மூலமும், மேல் பூச்சாகப் பூசுவதன் மூலமும்மேகலெட்டை, நரம்பு சம்பந்தமான நோய்கள், கை, கால் பிடிப்பு, காசம், தொண்டைக்கட்டு, குடல்புண், வயிற்றுக் கடுப்பு, நீரிழிவு, சீதள பேதி, ஆஸ்துமா, மூலநோய், இரத்தச் சோகை, ரிபி, அக்கி, சிறுநீரக நோய்கள, போன்ற பலவிதமானநோய்களிலிருந்து நிவாரணம் பெறலாம் என்று சித்த ஆயுள்வேத மருத்துவம் கூறுகின்றது.

### விஞ்ஞான ஆய்வுகள்

சித்த ஆயுள் வேத மருத்துவம் மட்டுமன்றி விஞ்ஞான ஆய்வுகளும், தீராதபல நோய்களைத் தீர்த்து வைக்கும் சக்தி பாலுக்கு உண்டு என்பதைத் தெட்டத் தெளிவாகஉணர்த்தி நிற்கின்றன.

பாலுடன் கருவேலம் பிசினைப்பொடி செய்து போட்டுக் காய்ச்சிக் குடிக்க நரம்புத் தளர்ச்சி நோயும், வில்வமிலையைப் போட்டுக் காய்ச்சிக் குடிக்க மூல நோயும், ஓமத்தை போட்டுக்காய்ச்சிக் குடிக்க ஆரம்ப கட்டத் துத் சுசம்(ட.பி) நோயும், தூதுவளையிலையைப் போட்டுக் காய்ச்சிக் குடிக்க ஆஸ்துமா நோயும், பப்பாளிச் சாற்றுடன் பாலைக் கலந்து மேல் பூச்சாகப் பூச அக்கி நோயும் குணமடையும் என்பது அனுபவ வைத்தியம் மூலம் கண்டறியப் பட்ட உண்மையாகும்.

இத்தகைய பல சிறப்புத் தன்மைகளையும், நன்மைகளையும் கொண்டதாகப் பால் விளங்குவதாலேயே 'பாலைப் பொழிந்து தரும் பசுமிக நல்லதடி பாப்பா' என்று பாரதியார் பாடினார் போலும்,

பசும்பாலைப் போன்றே பாலிலிருந்து பெறப்படும் தயிரும் நெய்யும், பசுஞ்சாணியும், சலமும் ஏதோ ஒருவகையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்கி எமது வாழ்வியல் தேவைகள் பலவற்றை நிறைவு செய்வதாகவே உள்ளன. இதன் காரணமாகவே பால், தயிர், நெய், பசுஞ்சாணி, சலம் என்பவற்றில் முறையே சந்திரனும், வாயுபகவானும், சூரியனும் அக்கினிதேவனும், வருண பகவானும் குடியிருப்பதாகப் புராணங்கள் கூறி நிற்கின்றன.

### பசுவினம்

நலமத்தனையையும் அள்ளித் தரும் ஆரோக்கிய பானமான பாலையும் வேறு பொருட்களையும் வாரி வழங்கி, எமது பொருளாதார சுபீட்சத்திற்கும் நீடித்த ஆரோக்கிய வாழ்விற்கும் உறு துணையாக விளங்கும் பசுவையும் அதன் இனத்தையும் பாதுகாத்து ஏற்ற உணவுகளை கொடுத்து வாழ்விக்கச்செய்வது நம் ஒவ்வொருவரதும்கடமையாகும். ஆனால் இதனை மறந்து தமிழர்களின் செல்வமாகவும், மங்கலச் சின்னமாகவும், தானப் பொருட்களில் சிறந்ததாகவும், பொருளாதார பண்டமாகவும், தெய்வாம்சமிக்கதாகவும் விளங்கும் பசுவையும் அதன் இனத்தையும், பல்வேறு தேவைகளுக்காக நாளுக்கு நாள் அழித்தும், இம்சித்தும் வருகின்றோம். பசுக் கொலைக்கு அஞ்சி நாட்டை விட்டோடிய உத்தமர் வாழ்ந்த நாட்டில் வாழும் நாம் அதனைக் கூசாது கொலை செய்கின்றோம்; வதைக்கின்றோம். அன்பின் வழியிலே வாழ வேண்டியவர்களாகிய நாம் அதனை மறந்து செயல் படுகின்றோம். பசுவைக் காப்பதற்காக, அதனை வதைப்பதைத் தடுப்பதற்கான பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காகப் போடப்படும் திட்டங்களையும், சட்டங்களையும், கூக்குரல்களையும் அலட்சியப் படுத்துகின்றோம். இந்த நிலை மாற வேண்டும். அறவாழ்வுவாழ்வதாகக் கூறும் நாம் கொல்லாமையும், புலால் உண்ணாமையும் கடைப்பிடித்தொழுக முனையவேண்டும். மனு நீதிச் சோழனின் மாண்பினை உணர வேண்டும். ஆகக் குறைந்தது பதினைந்து வருடங்களாவது உயிர் வாழ்ந்து நிறைய பலனைத் தரும் பசுவினையும் அதன் இனத்தினையும் அழிப்பதால் நாட்டிற்கு ஏற்படும் தீங்கினை உணர வேண்டும்.

சம்பிரதாயத்திற்காக, பட்டிப் பொங்கலன்று தொழுவத்தையோ அல்லது பட்டியையோ சுத்தப்படுத்தி, பசுக்களை நீராட்டி சந்தனம், குங்குமம் இட்டு மலர் மாலை சூடி, அலங்கரித்து உணவூட்டி மகிழ்வதுடன் நின்று விடாது என்றென்றும் அதனைப் பேணிப் பாதுகாத்து பாவம் போக்கி, இலாபம் பெருக்கி வாழ முயல வேண்டும். ■

## கவிஞர் வைரமுத்துவிற்கு இங்கிலாந்துக் கல்வி அமைச்சர் பாராட்டு

(சென்னை)

கவிஞர் வைரமுத்துவிற்கு இங்கிலாந்து கல்விஅமைச்சர் ஸ்டீபன் டிம்ஸ்பாராட்டுதெரிவித்துள்ளார்.

மனித இனம் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில்தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள் நாடு, சாதி, மதம், மொழி என்ற பேதங்களை களையக் கூடியவை என்று வைரமுத்துஎழுதிய 'கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலுக்கு லண்டனில் பாராட்டு விழா நடைபெற்ற போது தெரிவித்துள்ளார். (உ-3)

## ஐரோ. மனித உரிமை நீதிமன்றம் கருணைக் கொலைக்கு மறுப்பு

(ஸ்ட்ரஸ்பேர்க்)

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் பெண் ஒருவருக்கு, கருணைக் கொலை செய்து அவர் உயிரை மாய்த்துக் கொள்ள முடியாது என ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம்கருணைக்கொலை சம்பந்தமான வழக்கில் தீர்ப்பளித்துள்ளமை இதுவேமுதற் தடவையாகும்.

நரம்புமுடக்கம்காரணமாக கழுத்துக்குகீழ், முற்றும்செயற்பாடத நிலையில் வாழ்ந்து வரும் டயேன் பிரிட்டி என்ற பெண் மணிக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் நெதர்லாந்தில மட்டுமே சருணைக் கொலைகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## மதக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுக்கு 150 கோடி

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத்மாநிலத்தில் ஏற்பட்ட மதக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்காக 150 கோடி ரூபா சலுகைத்திட்டத்தை பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் கடந்த செவ்வாய் கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வீடுகளைப் பெறவும், தொழிலை ஆரம்பிக்கவும் முடியும். வன்முறையால் பாதிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சத்திற்குக்அதிகமான மக்கள் இன்னமும் முகாம்களிலே தங்கியுள்ளனர்என்றும் இவர்களுக்குஇத்திட்டத்தால் அதிகபயன் கிடைக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது (உ-9)

## தடைகள் போட்டாலும் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட தயங்கேன்

### வை.கோ. நாடாளுமன்றில் உரை

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்திருந்தாலும் புலிகளுக்கு ஆதரவானசெயற்பாடுகளில் நான் முன்னின்று உழைப்பேன் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபால சாமி இந்திய நாடாளுமன்றில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இந்திராகாந்திபடு கொலை செய்யப்பட்ட போது காங்கிரஸ் கட்சியினர் சீர்கேயினருக்கு எதிராக நடத்திய படு கொலைகள் குஜராத்வன் முறைகளை விடமோசமானவை தற்போது இடம் பெற்று வரும் குஜராத் வன்முறை சம்பவங்களுக்கு காங்கிரஸ்கட்சியே காரணமாக இருக்கலாம் எனவும் ஆதாரங்களுடன் அவர் தெரிவித்துள்ளார். (உ-7)

## ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடாத்தப்படும் ஹொக்கிப் போட்டித் தொடரில் இன்று பி.ப. 4.00மணிக்கு வெட்டுக்கிளி (பி)வி.க. எதிர் சென்றலைற்ஸ் வி.க,

பி.ப.4.30 மணிக்கு பல்கலைக்கழக (நீலம்) வி.க எதிர் செவின் ஸ்ரார் வி.க,

பி.ப 5.00 மணிக்கு பற்றிசியன் வி.க எதிர் கோப்பாய் வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## அரபாத் விடுதலை

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் படைகளால் ரம்ழா நகரில் தடுத்துவைக்கப்பட்ட பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டுள்ளார் என தெரியவருகிறது.

யசீர் அரபாத்மீதான முற்றுகைகளை விலக்கிக்கொள்ளுமாறு அமெரிக்காஉட்பட சர்வதேச நாடுகள் இஸ்ரேலுக்கு கொடுத்த அழுத்தத்தை அடுத்தே அரபாத் விடுவிக்கப்பட்டுள்ளார். (உ-7)

## சாரணர் இயக்க அங்கத்தவர் கணக்கெடுப்பு

யாழ். மாட்ட சாரணர் இயக்கத்தின் அங்கத்தவர்களை கணக்கெடுத்துமொத்த தொகையைத் தருமாறுமனிதவள அமைச்சின் பிரதம ஆணையாளர் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

மேற்படி விபரங்களை இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப்பாடசாலைகள் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ-19,2)

## இராசி பலன்

03-05-2002
சித்திரை 20 வெள்ளி
சப்தமி பி. இ 4.01 வரை
உத்தராடம்மு.இ 9.28 வரை
இராகு காலம் 1.27-2.57
நல்ல நேரம் 7.27-8.57

### மேடம்

தொழில் முன்னேற்றம், பணியாளர் உதவி, நல்ல செய்தி, காரியம் கைகூடும்.

### இடபம்

பெரியோர் மதிப்பு, தொழில் கஷ்ரம், புதிய திட்டமிடல், முயற்சி தாமதம்.

### மிதுனம்

பிரயாண கஷ்ரம், எதிர்பாராத பிரச்சினை, நல்ல உணவு கிடைத்தல், காரிய தாமதம்.

### கடகம்

கலந்துரையாடல், காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு திடீர் பிரயாணம்.

### சிங்கம்

செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, காரிய நன்மை, பொருள் சேர்க்கை.

### கன்னி

வியாபார நன்மை, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

### துலாம்

தன்னம்பிக்கைக் குறைவு, காரியதாமதம், இனசனத் தொடர்பு, உடல் நலக் குறைவு.

### விருச்சிகம்

அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, புதிய பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை,

### தனுசு

பொருள் விரயம், காரிய தாமதம், தேவையற்ற வார்த்தை, நண்பர்கள் உதவி.

### மகரம்

சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும், போசன சுகம், நண்பர்கள் உதவி.

### கும்பம்

உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், சுப செலவு, பிதா சிந்தை.

### மீனம்

தெய்வ தரிசனம், முயற்சி நன்மை, பொருள் சேர்க்கை தொழிற்சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

நல்லூர் பிரதேச நூலகம்

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்
சொல்லும் வல்லது அமைச்சு
-குறள்

# வலம்புரி

## உள்ளும் புறமும்!

நோர்வேத் தூதுக் குழு ஜனாதிபதியைச் சந்தித்து சமாதானமுயற்சிகுறித்து விளக்கிக் கூறிய போது சமாதான முயற்சிக்குத் தனது பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் இருக்கும் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்பே ஜனாதிபதி அவ்வாறு கூறியிருந்தார்.

சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது மேதின உரையில் அரசு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது ஏமாற்று வித்தை அதனால் ஒரு போதும் சமாதானம் ஏற்படப் போவதில்லையென வாக்குக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் முக்கிய அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருப்பது அவரின் ஆழ் மன நிலையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

என்ன பாடுபட்டும் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக முன் கூட்டியே அறிவித்திருந்த ஜனாதிபதி தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் சமாதானம் ஏற்படப்போவதில்லை எனக் கூறுவது அரச கட்சியை எதிர்ப்பதே ஒரு எதிர்க் கட்சியின் கடமை எனக் கருதுகிறார் போலும்.


'யுத்தத்தின் கொடூரத்தின் தாக்கத்தை என் தனிப்பட்ட வாழ்விலும் அனுபவித்தவள் நான்' என ஒருகாலத்தில் கூறிய ஜனாதிபதி சந்திரிகா மேதினக் கூட்டத்தில் ஆற்றிய உரை அவரின் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையே சுட்டி நிற்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி சமாதானப் பேச்சு வார்த்தைகள் தாய்லாந்தில் நடைபெறுவதற்கான முயற்சிகள் முனைப்புடன் எடுக்கப் பட்டு வரும்போது ஜனாதிபதியின் மேதின உரை நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இன யுத்தம் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டபோதிலும் ஆளும்கட்சி எடுக்கும் சமாதான முயற்சியை எதிர்க்கட்சி எதிர்க்கும் வழமை இலங்கையில் இன்னமும் ஒழியவில்லை. அதுவரை சமாதானத் தீர்வில் முட்டுக்கட்டைகள் ஏற்படவே செய்யும்;

# கலியுகத்தில் கலக்கமடையாது வாழ்வதற்கு
# உற்ற துணைகள் 5 உள்ளதனை உணருங்கள்

## வெள்ளி நற்சிந்தனை



### ஆ. கதிரமலைநாதன்

பகவானாகிய விஷ்ணு மூர்த்தி நல்லோரைக் காக்கவும், தீயோரை அழித்து, தர்மத்தை நிலை நாட்டவும் யுகம் தோறும் அவதாரமெடுப்பேன்' என்று கீதையில் அர்ச்சுனனுக்குச் சொல்லி வைத்தார்.

இவ்வாறே அவர் பத்து அவதாரங்களை எடுப்பார் என்று விளக்கம் சொன்ன வைஷ்ணவ ஆழ்வார்கள், ஒன்பது அவதாரங்கள் நிறைவடைந்ததாயும், 'கல்கி' அவதாரம் ஒன்றே கலியுக முடிவில் தோற்றம் பெறவுள்ளதனையும் விபரித்துள்ளனர்.

**கண்ணனிடம் முறையீடு**

கலியுகம் வரப்போவதனை, அதனால் இவ் உலகிற்கும் அங்கு வாழப்போகும் ஜீவராசிகட்கும் ஏற்படவிருக்கும் துர்ச் சகுனங்களையும், நன்மையின் அழிவு-தீமையின் எழுச்சி என்பவற்றினையும் தெரிந்து கொண்ட முக் காலமும் உணர்ந்த முனிவர்களும், சகல வேத சாஸ்திரங்களையும் கற்றுத் தெரிந்து அதன்படி ஒழுகுபவர்களான வேத விற்பன்னர்களும் கண்ணனிடம் சென்று இது பற்றிப் பெரிதாக முறையிடுகின்றனர்.

'நீரே காத்தற் கடவுள். அவ்வாறாயின் எம்மை இக் கொடிய இக் கட்டிலிருந்தும், மீட்டுக் கொள்வதற்குரிய இலகுவான வழி வகைகள் ஏதாவது இருக்கின்றனவா? அவ்வாறாயின் அவை பற்றித் தெளிவாகக் கூறி விட்டு வைகுந்த லோகத்திற்குச் செல்வதே உமது பெருமைக்கு ஏற்றதாகும்' என இறைஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

**ஐந்து துணைகள்**

அதன் போது கண்ணன் மனமுவந்து பின்வரும் எளிய யாவரும் எப்போதும், எங்குமே கைக்கொள்ளக் கூடிய வழி வகைகளை-அவர்களை பின் பற்றுமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

'துன்பத்தில் வருந்துவோர்களைக் கடைத்தேற்றுவதற்கென்றே முழு முதற் கடவுளான ஈசனின் திருப்பாதக் கமல மலர்கள் விளங்குகின்றன. மேலும் அவற்றை மனப் பூர்வமாக அர்ச்சனை செய்வதற்கும் செய்விப்பதற்குமெனவே நன்கு முகை அவிழ்ந்த சிறந்த மலர்களுள்ளன. இத்துடன் இறைவன் திருப்பாதங்களை நீராட்டுவதற்கென்றே குளிர்ச்சி நிறைந்த நீர் அமைந்துள்ளது. இவ்வாறு செய்த பின் அவனை மனமார நினைத்து உள்ளத்துள் உருப்போட்டுக் கொள்வதற்கென்று ஐந்தெழுத்தாலான சிவாயநம' என்ற மந்திரம் சொல்லப்பட்டுள்ளது. இவற்றுக்கும் மேலாக ஒருவன் தனது மனப்பயத்தை நீக்கி உடம்பு முழுவதும் பூசிக் கொள்வதற்காகவே சாம்பலாகிய வெண்ணீறு புகழ்ந்து கூறப்பட்டுள்ளது.

ஒன்றல்ல, இரண்டல்ல இவ் ஐந்தும் எப்போதும் உங்களுடன் கூடவே துணையாக இருக்கப்போகும் போது, கலியுகம் யாரை என்னதான் செய்துவிடும்? ஒன்றுமே தெரியாத மூடர்கள் போல தேவையற்று கலக்கமடைவது ஏன்? என்று ஆறுதல் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

கூர்ம புரணத்தில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் இவற்றைச் சொல்லுகின்றது ★

# பால் ஆலய தேவைகளுக்கு முக்கியத்துவமளித்து
# ஏனைய பல வழிகளிலும் பயன்படுத்தப்படுகிறது

### திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன்
மல்லாகம்

இயற்கையிலேயே இறைவனைக் கண்டு அவனை அன்பு வடிவாக, அறிவு வடிவாக, இன்ப வடிவாகக் கொண்டு பல்வேறு நாம ரூபங்களைக் கொடுத்து வழிபாடியற்றி வரும் நாம், கோயில்களிலே எழுந்தருளியிருக்கும் இறைவனை எம் நலனைக் கருத்திற் கொண்டோ அன்றிப் பிறரின் நலத்தைக் கருத்திற் கொண்டோ தினந்தோறுமோ அன்றி விசேட தினங்களிலேயோ பூசை முறையினைக் கையாண்டு வழிபாடியற்றுவது வழக்கமாகும். இலகுவான கிரியை முறையாக அமைந்து விளங்கும் பூசையின் முதலாவது அம்சமாகத் திகழ்வது அபிடேகமாகும். இந்த அபிடேக நிகழ்வின் போது பரிசுத்தமான இடங்களிலிருந்து பெறப்பட்ட மந்திரங்களினால் புனிதப்படுத்தப்பட்ட நீரையும், வேறு பல அபிடேகத் திரவியங்களையும் பயன்படுத்தி இறைவனைத் திருமுழுக்காட்டும் போது பசுவிலிருந்து பெறப்படும் பாலும், தயிரும், நெய்யும், (பஞ்சகவ்வியமும்) முக்கிய இடத்தைப் பெற்று விளங்குவதைக் காணலாம்.

**பாலாபிஷேகம்**

இறைவனைத் திருமுழுக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பால், தயிர், நெய், பஞ்சகவ்வியம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், கருப்பஞ்சாறு, பன்னீர் போன்ற பொருட்களிலே பாலைக்கொண்டு செய்யப்படும் பாலாபிஷேகத்திற்குத் தனிச்சிறப்பும் பெருமையுமுண்டு. உலக நன்மையின் பொருட்டு எவர் ஒருவர் சிவலிங்கத்திற்குப் பாலாபிஷேகம் செய்கின்றாரோ அவரது தாபமும் உலக தாபமும் தீரும் என்பது காத்தற் கடவுளால் பாலாபிஷேகம் செய்வோருக்கு கொடுக்கப்பட்ட வரமாகும். பாலைக்கொண்டு அபிடேகம் செய்வோருக்கு நீண்ட வாழ்வு கிடைக்குமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. கொடிய நோய்களை எதிர்க்கும் சக்தி, கருங்கல்லில் பாலாபிஷேகம் செய்யும் போது ஏற்படும் கதிர் வீச்சுக்கு உண்டு என்று அறிவியல் ஆய்வுகள் எமக்குணர்த்தி நிற்கின்ற காரணத்தினால் சமய ரீதியிலே நிகழ்த்தப்படும் பாலாபிஷேகமானது, எம் வாழ்வினை நோய் நொடியின்றிக் காத்து நீண்ட காலங்கள் நீடிக்கச் செய்யும் என்பது உண்மையே. அதனை நன்மையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரதும் முயற்சியிலேயே தங்கியுள்ளது. ஔர்வ மகரிஷியின் தவ வலிமையை உலகிற்கு உணர்த்தவும், அவரின் வாக்கைப் பலிக்கச் செய்யவும், 'சிவபெருமானும் தாபமடைந்து, உலகமெங்கினும் திரியட்டும் எனும் ஔர்வ மகரிஷியின் சாபத்தை சிவபெருமான் ஏற்றுக்கொண்டமையால், சிவபெருமானுக்கு ஏற்பட்ட தாபத்தையும், அதனால் உலகிற்கு ஏற்பட்ட தாபத்தையும் போக்குவதற்காக, கோகர்ணத்திலுள்ள பசுக்களெல்லாவற்றிலுமிருந்து பெறப்பட்ட பாலைக் கொண்டு, நாராயணன் சிவபெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்ததைப்போல் நாமும் பாலாபிஷேகம் செய்து நலம் பெற முனைவோமாக.

**அனைத்து நிகழ்வுகள்**

பசுவிலிருந்து பெறப்படும் பாலானது சிறந்த அபிடேகப் பொருளாக மட்டுமன்றி, எமது சமூகவைபவங்களிலும், பிறப்புத தொட்டு இறப்பு வரையிலும், அதன் பின்பும் நிகழும் அனைத்து நிகழ்வுகளிலும முக்கிய இடம் பெற்று நிற்பதைக் காணலாம். எமது பிறப்பின் பின நிகழும் துடக்குக்கழிவு முடியிறக்கல், முதற்சோறூட்டல், பூணூல் சடங்கு, புதுமனைப்புகுவிழா, பிறந்தநா விழா போன்ற மங்கல நிகழ்வுகளின் போதும் இறப்பின் பின் நிகழும் மரணச் சடங்கு, காடாற்று, அந்தியேட்டி, ஆண்டுத் திவசம் போன்ற அமங்கல காரியங்களிலும, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகளிலும், விழாக்களிலும முககியத்துவம் பெற்று விளங்குவதை எமது வாழ்வியல், நிகழ்வுகள் எமக்குணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு எமது சமூக,சமய வைபவங்கள், விழாக்கள், கிரியைகள் போன்றவற்றில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் பாலானது இன, மத, பேதங்களைக் கடந்த நிலையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### வழிப் போக்கன்

வந்தவரவை மறந்துலகாய் வாழ்ந்து கன்ம
பந்தமுறவுன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்
இந்தமதி ஏன் உனக்கிங் கென்மதிகேள் என்னாலே
சந்தநெஞ்சே பரத்திற் சாரின் இன்பம் உண்டாமே.

- தாயுமானவர்

வேந்தே, நான் இவ்வுலகில் ஒரு வழிப்போக்கன் என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள் வேனாக.

வழிப் போக்கன் ஒருவன் வழியைப் பாழ்படுத்தலாகாது. வழியைத் துப்புரவு படுத்த வேண்டும். நன்கு பயன்படுத்துதற்கே வழியிருக்கிறது. அது எல்லார்க்கும் சொந்தம். வழியைப் பயன்படுத்தலாம். ஆனால் அதனிடத்து உரிமை பாராட்டலாகாது. அதில் பற்று வைத்து அங்கேயே நின்று விடுவதும் பொருந்தாது. அதைக்கடந்து, சேரவேண்டிய இடம் போக வேண்டும். இவ்வுலகம் என்னும் வழியில் மக்கள் ஓயாது வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றனர்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் செல்லையா மெற்றாஸ்மயிலின் "மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது" என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்ற பொழுது கலாநிதி திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ.கனகரத்தினம் பிரதி பெறுவதையும், வில்லிசைச் சக்கரவர்த்தி நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) ஆசியுரை வழங்குவதையும் காணலாம்.

### பிரதமரின் சமாதான...

சிக்கலாக்கி அதன் மூலம் அரசியல் லாபம்தேட சில சக்திகள் முயற்சி எடுப்பது தனக்கு வேதனை அளிப்பதாகவும் தோர் கவலை தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் நேர்மையாக செயற்படுத்தும் சமாதான முயற்சி வெற்றி பெறும் என்றும் அவர் ஆசி கூறினார்.

யுத்தநிறுத்தம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்ட பின்னரே பேச்சு வார்த்தைகள் பற்றி கவனம் செலுத்தப்படும் எனவும், நாட்டுப்பிரிவினை பற்றிய எந்தவொரு அம்சமும் புலிகளுடனான பேச்சு வார்த்தையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது எனவும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய சிவில் நிர்ணய உரிமை வழங்கப்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர் எனவும் பிரதமர் மேலும் கூறினார். (இ)

### 19ஆவது ஆண்டு விழா

காரைநகர் விளானை சனசமூக நிலையத்தின் 19வது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் ஒருமணிக்கு நிலையத்தலைவர் ஆ.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும். (இ.226)

### மக்களின் விருப்பத்தை...

கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள சில சரத்துக்களும், தலைவர் பிரபாகரன் கூறிய சில கருத்துக்களும் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

☼ விடுதலைப் புலிகளிடம் வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையை ஒப்படைத்தல்

☼ பாதுகாப்புப் படையினரை வடக்குக் கிழக்கில் இருந்து அகற்றுதல்

☼ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குதல் குறித்து மக்களினது கருத்தினை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமே அடையப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். சகல மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய கௌரவமான தீர்வை பேச்சுவார்த்தைகளின் மூலம் அடைவதற்கு தொடர்ந்தும் தான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (த)

### ஐ.சி.ஆர்.சி....

புலிகளுக்கும் இடையே பரிமாறுவதன் மூலமாக உத்தரவாதப்படுத்துதல்.

▸ பொதுமக்களின் பயணம் தொடர்பான பிரச்சினைகளை பயணப்பாதையில் பிரசன்னமாகியிருக்கும் தொடர்புடையவர்களுக்கு தெரியப்படுத்துதல்.

▸ சூனியப்பிரதேசத்தை உபயோகப்படுத்துபவர்கள் அதன் முக்கியத்துவத்தை பேணி மதிப்பதை உறுதிப்படுத்தல்.

▸ பொதுமக்களின் வேண்டுகோள்களிற்கு அமைய அவர்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல். (இ)

### அனுராதபுரம் சிறை...

விட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தம்மீதான விசாரணையை துரிதப்படுத்துமாறு அல்லது தம்மை விடுதலை செய்யுமாறு கோரியே சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். (த)

### வாகரையில்...

வைத்து கருத்துத் தெரிவிக்கையில் :-

மட்டக்களப்பு வாகரைக் கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தற்போது விசாரணைகள் நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில் சம்பவம் நடைபெற்ற வாகரைக் கடற் பிரதேசத்திற்கு நேரில் சென்று ஆராய்ந்த பின்னரே அது தொடர்பான முழுமையான விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு நோர்வேயின் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் பியூறு ஹெவ்டே நேற்று மட்டக்களப்பிற்குச் சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

### வவுனியா படை...

தரப்பில் தளபதி மேஜர் ஜெனரல் சூலசெனிவிரத்தனா, பிரதிப் பொலிஸ் மாஅதிபர் என்.தர்மரத்தினா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

போக்குவரத்துக்களின் போது ஓமந்தை சோதனைச் சாவடியில் இடம் பெற்றுவரும் சில நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பான விடயங்கள் பேச்சுவார்த்தையில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

### கண்காணிப்புக் குழு...

நேற்று முன்தினம் வாகரையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவும் ஆரயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரு சாராருக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்கள் எதுவும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. (ம)

அன்னையின் சேவாச்சிரமம்
ஆத்மீக மனித நேய சேவையில்
32 ஆண்டுகள் பூர்த்தி

விசேட நிகழ்வு – வீடியோ படக்காட்சி

இடம் : பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம்
காலம் : நாளை (04.05.2002) சனிக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி வாழ்க்கைக் காவியம்

முக்கிய குறிப்பு : இதுவரைக்கும் சேவாச்சிரமத்தால் 45 லட்சம் ரூபா, பின்தங்கிய விதவைகள், குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
–செயலாளர் (C/4164)

சாராய விற்பனை விலை மாற்றம்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாராய வகைகளின் மொத்த விற்பனை விலைகள் 03-05-2002 தொடக்கம் பின்வரும் விபரப்படி மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்கள், மதுபான நிலைய முகவர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

விகர் (750 மி.லீ) - 195.00
V.S.V.99 (750 மி.லீ)- 220.00

பொதுமுகாமையாளர்
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்
(C/4165)

மில்க்வைற்


மில்க்வைற் சோப் இண்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

சன்சயின் சோப்
மாணவர்களே!
கூடிய விரைவில் போட்டியை எதிர் பாருங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி
[C/4050]

பற்களின் வெண்மைக்கும், பாதுகாப்பிற்கும்
அண்ணு பற்பொடி

அண்ணு தொழிலகம், இணுவில்

ராஜா
(யாழ்ப்பாணம்)
4வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் **ரமேஷ்குமாரின்** அன்புத்தந்தையார்

## கார்த்திகேசு சுந்தரலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

–வலம்புரிக்குடும்பம்

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு - சுந்தரலிங்கம்

*(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், யாழ்ப்பாணம் கச்சேரி)*

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஓட்டுமட வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுந்தரலிங்கம் (02.05.2002) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு-நல்லதங்கம் தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் ரமேஷ்குமார்(வலம்புரிஅலுவலகம்), நிரஞ்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி(பிரான்ஸ்), புவனேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியை) யோகேஸ்வரி(பிரான்ஸ்), லீலாவதி(யாழ் போதனா வைத்தியசாலை, தாதி உத்தியோகத்தர்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், கனகரெத்தினம்(பிரான்ஸ்), குகநேசன்(குகன் போட்டோ), பத்மநாதன்(பிரான்ஸ்), கமலேஸ்வரன்(புகையிரதப் பகுதி உத்தியோகத்தர், புத்தளம்), பத்மாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கனடா), பஞ்சாட்சரம்(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், கனடா), செல்லத்துரை(உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2002 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**64, ஓட்டு மடம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*தகவல்:*
**சு.சரஸ்வதி** (மனைவி)
**சு.ரமேஷ்குமார்** (மகன்)

(5060)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.